தி. வெ. எண் 2041 KUDI ARASU. தனிப்பிரதி விலை {உள் நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா}

# குடி அரசு


உள்நாட்டு சந்தா ஒரு வருஷம் ... ரூ 3—0
அர்த்த சந்தா ... ... ரூ 1—12
வெளிநாட்டிற்கு ... ... ரூ 4—0

வாரப்பதிப்பு.
பத்திராதிபர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 1
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 4 | ஈரோடு, விபவ ஆண்டு புரட்டாசி மீ 22 உ. (7—10—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 24



இப்பொழுதுதான் வந்தது!! புதிய சரக்குகள்!!

## உறுதியான லீண்டி கறுப்பு நூல் பெல்ட்டிங்குகள்.

கீழ்கண்ட சாசுமான விலைக்கு விற்கப்படும்.

3/16 இன்சு கனம் உள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| 3 இன்சு அகலம் | ரூ. | 0—7—0 | ஓர் அடி. |
| 3 ,, | ,, | 0—10—6 | ,, |
| 4 ,, | ,, | 0—14—0 | ,, |

1/4 இன்சு கனம் உள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| 4 இன்சு அகலம் | ரூ. | 1—2—6 | ஓர் அடி. |
| 5 ,, | ,, | 1—7—6 | ,, |
| 6 ,, | ,, | 1—12—0 | ,, |

## 26 கேஜ் கலாய் இரும்புத்தகடுகள்

அடியிற்கண்ட விலைக்கு விற்கப்படும்:—

| | | | | |
|---|---|---|---|---|
| 6 அடி நீளம் | 33 இன்சு அகலம் | ரூ. | 2—4—0 | ஒரு தகடு. |
| 7 ,, | ,, | ,, | 2—8—0 | ,, |
| 8 ,, | ,, | ,, | 3—0—0 | ,, |
| 9 ,, | ,, | ,, | 3—6—0 | ,, |
| 10 ,, | ,, | ,, | 3—12—0 | ,, |

MASSEY & Co. LTD. ENGINEERS

மாஸி அண்டு கம்பேனி (லிமிடெட்)
திருச்சிரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்ட், கோயமுத்தூர்.

## போட்டோ ஆல்பம்.




நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுந்தரமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாநகரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதுகிறார்கள். நீங்கள் உடனே முந்துங்கள். விலை ரூ 2-12-0

தி. கிருஷ்ணா ஏஜன்சி, தபால் பெட்டி 119 மதராஸ்.

## அனிதா காஸ்பார்ட் வைத்தியசாலை.

ஸ்ரீமதி டாக்டர் மார்த்தா
வோகளி ஆரியா
எம் ஏ, பி டி, எம் டி,
சர்ஜன் அண்ட் பிஸிஷன்

கர்ப்ப சம்பந்தமான சகல வியாதிகளையும் நிவர்த்திப்பதிலும், மருத்துவம் செய்வதிலும் கைதேர்ந்தவர்.

குழந்தைகளின் வியாதிகளுக்கு சிறந்த வைத்தியம் செய்யப்படும்.

டாக்டரை பார்க்கும் நேரம்;—
காலை 8 முதல் 11 மணி வரை
மாலை 5 முதல் 6 மணி வரை
டெலிபோன் நெ. 3789.

158, புரசைவாக்கம் ஹைரோட், வேப்பேரி, சென்னை.

முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி. எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும், ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்வொர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

## 'திராவிடன்'

தினப்பதிப்பு சந்தா விபரம்.

| | |
|---|---|
| மாதமொன்றுக்கு | ரூ. 1—6—0 |
| சென்னையிலும் ஏஜண்டு உள்ள இடங்களிலும் மாதமொன்றுக்கு | ,, 1—0—0 |
| தனிப்பிரதி | 0—0—6 |
| மலாய் நாட்டுக்கு வருஷம் ஒன்றுக்கு | ,,18—0—0 |

மானேஜர்,
"திராவிடன்" மவுண்ட்ரோட்,
மதராஸ்.



## அசல் வெள்ளி நகைகளை வாங்குங்கள்.

அசல் வெள்ளியினால் தயார்செய்த அருணாக்கொடி கினுசுகள், கொலுசுகளில் சாதா செயின், முத்து செயின், பட்டையடித்த செயின், ஒட்டியாணம், காப்பு கடகம், மயிர் மாட்டி, பீலி, அருப்பு சங்கிலி, சாவிச் சங்கிலி, கம்மல், தோடு, கடுக்கன், மோதிரம், இதர தங்கம், வெள்ளி நகைகளும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு குறைந்த விலைக்கு கிடைக்கும். விபரத்திற்கு எழுதவும்.

**S. K. மாணிக்கம் செட்டி,**
தங்கம், பவுன், வெள்ளி
நகைகள் வியாபாரம்,
செவ்வாய்பேட்டை. சேலம்,



அன்பார்ந்த நண்பர்களே!

மனதிலுள்ள விஷயங்களை இங்கிலீஷில் வாக்கிய ரூபமாய் வெளிப்படுத்திப் பேசுவதற்கும் எழுதுவதற்கும் சாதகமாய் உபயோகப்படக் கூடியது

"ட்ரான்ஸ்லேஷன் கைட்"

என்னும் புஸ்தகம் ஒன்றுதான். ஏனெனில், இங்கிலீஷ் இலக்கண விதிகளையும் மொழி பெயர்ப்பின் தத்துவங்களையும் விஸ்தாரமாய் எடுத்துக்காட்டி உதாரணங்கள் சகிதம் யாவருக்கும் அனுபோகத்தில் பயன்படும்படிக்கான முறையில் இப்புஸ்தகம் எழுதப்பட்டுள்ளது. விலை அணா 10. வி. பி. சார்ஜ் அணா 4.

நீலகண்டம் புக் டிப்போ,
கயத்தார் P. O.
(திருநெல்வேலி ஜில்லா.



அநேக காக்ஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற

விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சு, கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள் 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0. நாட்டு காய்கறி ரூ 2-8-0.

சி. கோ. இ. சாதர்மீரா சாயபு,
ஹெட்சர்சி தோட்டம், சேலம்.



தமிழ் நாடெங்கும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத

## 'ஆனந்தகுணபோதினி"

ஆடிமாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

## அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக

3-வது ஆண்டு) வெளிவருகின்றது (3-வது ஆண்டு

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S G இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான இடம் இப்பத்திரிகை பொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜாவிநோதினி, இதுவே சித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்த குணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகைதமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்கு சமமான தமிழ் மாத பத்திரிகை எங்குமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, சென்னை.



நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
இதை—சாதனை செய்.

## சுவாச காச ரோக நிவாரணி

### என்னும் ஆஸ்த்மா பௌடர் சிகிட்சை.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சிதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, காரகாப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும் சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், விஷஜுரம், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் இந்த ஆஸ்த்மா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒரு முறைபரீக்ஷித்து பார்ப்பதவசியம்.

48 நாள் ஒருமண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு விலை ரூ. 1—4—0, தபால் செலவு வேறு. வியாபாரிகளுக்கு ஸ்பெஷல் ரேட். ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூகாவிலும் சோல் ஏஜண்டுகள் தேவை.

புரோப்ரைட்டர், மு. மா. சோக்கலிங்க முதலியார், திருநாவுக்கரசு வைத்தியசாலை
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. I.)



## மதனகாமேஸ்வர லேகியம்.

வீர்யவிர்த்திக்கு நிகரற்றது. உத்திரவாதமுள்ளது.

ஒரேமாதம் சாப்பிட்டுவந்தால் துரித ஸ்கலிதம், சொற்பன ஸ்கலிதம் முதலியன தீரும். ளர்த்துப்போன இந்திரியம் கெட்டிப்படும். குறைந்துபோன இந்திரியம் விருத்தியாகும். தளர்ந்துபோன நரம்புகள் உரத்துப் பெருத்து முறுக்கேறி ஜனனேந்திரியக் கருவிகள் பருத்துப் பலப்படும். தம்பன சக்தி உண்டாகும்.

20 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் விலை ரூ 2—8—0 தபால்செலவு பிரத்யேகம்.

சித்தவைத்தியசாலை, ஆநந்தநிலையம், திருச்செங்கோடு. S. I.

## ஜனசமூகம் எக்கேடு கெட்டாலும்

# தங்கள் காரியத்திற்கு மாத்திரம்

## தருமசாஸ்திரம் தழைத்தே யிருக்கவேண்டும்.

—0—

(கைவல்யசாமியார் எழுதுவது.)

கடவுள் பேரைச் சொல்லி எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம், என்ன வேண்டுமானாலும் செய்யலாம், ஆஸ்திகர்கள் என்கின்றவர்கள் தருமசாஸ்திரத்தின் பேரைச் சொல்லிக் கொண்டு தரும சாஸ்திரத்தில் தங்கள் நன்மைக்கு விரோதமாயிருப்பவைகளை தள்ளிவிட்டு மற்றவர்கள் நடக்க வேண்டியதற்கு மாத்திரம் தருமசாஸ்திரம் காண்பிப்பவர்கள் சாஸ்திர விஸ்வாசிகள். கடவுள் பேரைச் சொல்லியும் தரும சாஸ்திரத்தைக் காட்டியும் ஜனசமூகங்களை அடிமைப் படுத்தினது போதும். தருமசாஸ்திரப்பிரகாரம் நீங்களும் நடக்கவில்லை, அவை உலகத்திற்கு ஒத்தும் வருவதில்லை. ஜன சமூகத்திற்கு நன்மை பயக்காததும், அறிவாளிகள் ஒத்துக் கொள்ளாததுமான விதிகளைக் கடவுள் மடியிலும் சாஸ்திரத்தின் பேரிலும் போடாதீர்கள் என்று சொல்லுகிறவர்கள் நாஸ்திகர்கள், சாஸ்திர விஸ்வாசமில்லாதவர்கள். இதுதானா நம்முலகத்து நியாயம்? இந்த நியாயம் அநேக காலமாக நம் நாட்டில் நிலை பெற்று நின்றமையாலல்லவா நம் நாடு ஒரு சிறிதும் தலை எடுக்கவில்லை. இந்த நியாயத்தை நிலை நிறுத்தவே அனேக கதைகள் கடவுள் பேராலும் தருமமென்னும் பேராலும் எழுதப்பட்டு சாஸ்திரமென வழங்குகிறதென்பதை இனியுமா நீங்கள் தெரிந்து கொள்ளவில்லை?

கடவுள் பேரிலேயே எல்லாப் பழியையும் போட்டுவிட்டு நாமும் சும்மா இருந்து விடலாம். ஆனால் மனிதனுடைய எண்ணத்திலடங்காத-கணக்கில் கண்டுபிடிக்க முடியாத-காலமாக கடவுள் பேரில் தானே எல்லாப் பழியையும் போட்டு வந்தோம், அந்தக்கடவுள் செவி சாய்த்தாரா? ஏறெடுத்துப் பார்த்தாரா? ஏனென்று கேட்டாரா? எல்லா தேசத்துக் கடவுளும் ஒன்று தான் என்று நாம் நம்புவதானால் மற்ற தேசங்களில் இவ்வளவு பெரும் சுமைகளை அவர் பேரில் ஏற்றவில்லையே.. நம் நாட்டுக்குத் தனிக் கடவுள் என்று நினைப்போமானால் எல்லா சுமையையும் ஏற்றுவது தருமமா? அவருடைய தள்ளாத வயதில் நாம் ஏற்றும் எல்லா பாரத்தையும் எப்படி அவர் தாங்குவார்? எல்லா தேசத்துக் கடவுள் பேரிலுள்ள சுமையை அந்தந்த ஜனங்கள் ஏற்று அவரவர்கள் தேசத்துக் கடவுளின் சுமைகளைக் குறைப்பதை நாம் பார்த்துத் தானே வருகிறோம். அது போன்று நம் கடவுள் பேரில் போட்ட பாரத்தை அவர் ஏற்றுக் கொள்ளாமல் நாம் செய்த தவறுதலுக்கு வந்த துன்பம் இன்றும் தீரவில்லையே. கடவுள் சிருஷ்டியின் அற்புதத்தை அவனவன் அறிவால் பயன்படுத்திக் கொள்வதும் கடவுள் சிருஷ்டியான மற்ற ஜீவர்களை அன்பால் அனுசரிப்பது மல்லவோ கடவுளைக் கண்டோர் என்று சொல்லுகிறவர்களின் வார்த்தையாகவிருக்கிறது. கடவுள் பேரைச் சொல்லி தாழ்ந்தவர்களைத் துன்புறுத்தி அடிமையாகவே வைத்திருப்பது தானா கடவுளைக் கண்டோனும் கடவுளும் சொன்ன சாஸ்திரம்? நமது அறியாமையாலும், நம்மாசையாலும், நம் சுகத்திற்காகவும் ஏற்படுத்திக் கொண்ட சாஸ்திர வேறு பாடுகளை இந்த நூற்றாண்டில் கூட நாம் கண்டு கொள்ளா விட்டால் நம் சனசமூகம் அழுகிக்கெட்டு அழிந்தே போகாதா? என்பதுபோன்றவைகளைப்பற்றி யாராவது சிந்தித்தால் அதுவும் பெருத்த நாஸ்திகமாய் விடுகிறது.

இந்தியா சட்ட சபையில் பாலிய விவாகத்தைத் தடுக்க வந்திருக்கும் சட்டத்தை ஆட்சேபிக்கும் எம். கே. ஆச்சாரி சட்டசபையில் அதைத் தடுப்பதையும் ஸ்ரீ சங்கராச்சாரி வைதீக இந்துக்களின் பிரதிநிதிக் கூட்டத்து தலைவர் டி. வி. கிருஷ்ணசாமி அய்யர் ஆகியவர்கள் சிம்லாவில் உள்நாட்டு மெம்பரையும் மற்ற மெம்பர்களையும் கண்டு பேசினதையும் நீங்கள் கேட்டிருப்பீர்கள். உலக ஞாயமும் பொது அறிவுமுடைய மெம்பர்களும் வெள்ளைக்கார மெம்பர்களும் இவர்களைப் பற்றி என்ன நினைத்தார்கள், நினைப்பார்கள். வெளிஜனங்களும் அன்னிய தேசத்து ஜனங்களும் எப்படி மதிப்பார்கள் என்பதைப்பற்றி வெட்கமோ கவலையோ பட இவர்கள் இங்கிலீஸ் படித்து இந்தியா சட்ட சபையிலும் சிம்லா பங்களாவிலும் இருந்தாலும் பிச்சை எடுக்கும் சாஸ்திரப்பரம்பரை இவர்களை விடுவதில்லை, ஏனெனில் வைதீகத்திலேயே தன்னையன்னியர்கள் மதிக்க வேண்டுமே நியாயம் வேண்டுமே அன்னியர்கள் நம்மால் துன்பப்படுகிறார்களே என்பதுகளில் கவலை கொள்வதை நாம் பார்த்ததில்லை. இவை உங்களுக்கும் அனுபோகமே. ஒரு வைதீகனை என்ன தான் அவன் சொல்லுவது நியாயமில்லையென்று எடுத்துக் காட்டுங்கள், கோபியுங்கள், அப்பொழுதும் அவன் காரியத்தை விடான். பல்லைக்காட்டி மூக்கில் பேசுவான், மூகத்தைப் பரிதாபப்படும் படியான நிலைமையில் செய்து கொள்ளுவான் காரியத்திற்கு ஒரு சந்து கிடைத்து விட்டால் போதும். அந்தக் காரியங்களுக்கு வேண்டிய ஞாபகங்களைச் சொல்லிப் புகழ்வான். பக்கத்துப் பேச்சில் கலந்து கொள்ளுவான், வேலையிருந்தாலும் வேறுபேச்சிருந்தாலும் விடான். சமயம் அறியான் சந்தர்ப்பம் தெரியான். பின்னையென்றால் கேளான், வந்த காரியத்திற்கு ஒரு வார்த்தை வாங்காமல் போகான். காரியமாய் விட்டாலோ சலித்த சங்கதி வைத்தே பேசுவான், தூற்றுவான், நன்றியை நினைக்கவுமாட்டான. எல்லாரும் தங்களுக்குச் செய்வதை தருமமாக நினைக்க வேண்டுமென்று சொல்லி விடுவான்.

இவ்வளவு கேவலமான வைதீகம் ஏன் ஒழியவில்லை? அவர்களுடைய அக்கிரமங்கள் ஏன் போகவில்லை? அவர்களுடைய ஏமாத்து ஏன் பலித்துக்கொண்டு வருகிறது? ஏனென்றால் அநேகதெய்வங்கள் நமக்கிருப்பதால் ஏதாவதொரு தெய்வத்துடன் நம் அறியாமையும் கூடி அவர்களைக் காப்பாற்றி விடுகிறது. பாப்பான் செய்யும் குற்றம் குற்றமல்ல. அவன் பெரிய குற்றமான கொலைசெய்தால் கூட அவன் மயிரை வாங்கி எல்லா சுகத்தோடும் பக்கத்தூரில் கொண்டு போய் வைத்து விட்டு வந்து விடவேண்டுமென்றே தரும சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது.

இனி எடுத்துக் கொண்ட விஷயத்தைக் கவனிப்போம் ஸ்ரீமான்கள் எம். கே. ஆச்சாரியும் வி. டி. கிருஷ்ணசாமி அய்யரும் தரும சாஸ்திரத்தை இவர்களுடைய லௌகிக சுகங்களுக்கு காலின் கீழ் வைத்து மிதித்து விட்டு பெண்களுக்கு தரும சாஸ்திரம் விதித்த விதியை நிலைநிறுத்தும் விஷயத்தில் இவர்கள் சாஸ்திர யுக்தமான வைதீகர்கள் தான். அதில் சந்தேகமில்லை. எப்படியெனில் ஸ்மிருதிகள் என்பது தரும சாஸ்திரம். கலியுகத்திற்கு பிரமாணம் பராஸரஸ்மிருதி. இதில் முதல் அத்தியாயத்தில் சௌச விதியைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. சௌசம் என்றால் மலசலம் கழித்த பின் சுத்தி செய்வது இதற்கு இன்ன இடத்தில் இன்ன தண்ணீரில் இந்த மண்ணில் இன்னின்னவர்கள் இத்தனை இத்தனை தரம் கழுவவேண்டுமென்று விதியுமேற்பட்டிருக்கிறது. நான் கீழே எழுதும் அந்த விதியிலுள்ள ஒரு முக்கிய விஷயத்தை அனேகர் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். அதைக் கேட்டால் நீங்கள் ஆச்சர்யப்படுவீர்கள். தருமசாஸ்திரத்தின் போக்கையும் அதை உண்டு பண்ணினவர்களின் மனதின் போக்கையும் உணர்வீர்கள்.

சௌசம் கிரமமாகச் செய்யாத பிராமணன் பிராயச்சித்தம் செய்து கொள்ள வேண்டும். சௌசம் பிராமணனுக்கு வெள்ளை மண்ணும் சூத்திரனுக்கு கருப்பு மண்ணும், மலம் கழுவ விதித்த மண்கள். பிராமணனுக்கு விதித்த வெள்ளைமண்ணில் மண்ணின் அளவும் தண்ணீரின் அளவும் இன்னின்ன இடத்தை இத்தனையித்தனை தரம் கழுவவேண்டுமென்னும் கணக்கும் விதிக்கப்பட்டிருக்கிறது. பாப்பான் கழுவும்மண்ணிலும் தண்ணீரிலும் தரத்திலும் பாதியே சூத்திரனுக்கும் பெண்களுக்கும் விதிக்கப்பட்டிருக்கிறது. தருமத்திற்கு வியாக்கியானம் செய்ய வந்தவர்கள ஸ்தூலதருமம். சூக்கும தருமம். உலகவழக்கு வேதவழக்கு என்று நான்காகக் கூறியிருக்கிறார்கள். இந்த விதி எந்த தருமத்தைச் சார்ந்ததோ? வேதாந்த சாஸ்திரத்தில் தான் இதற்குத் தத்தவார்த்தம் எப்படிக்கூறுவார்களோ? நம்மால் அறிய முடியவில்லை. நாற்றம் போகிறவரையிலும் கழுவுவது எல்லாருக்கு மியற்கை. நாய்கூட இரண்டு மூன்று தரம் அதன் சந்தேகம் தீருகிறவரையிலும் தரையில் துடைத்து விடுகிறது. இதற்கொரு தரும சாஸ்திரம் வேண்டுவதில்லை- என்றாலும் நமக்கு மாத்திரம் விதியும் சாஸ்திரமும் எதற்கும் வேண்டும். விதியும் சாஸ்திரமும் ஒன்றைப்பார்த்து ஒன்றை சிறிது வித்தியாசப்படுத்தி எழுதுவதும் சனசமூகங்களுக்குச் சொல்லுவதும் அதனால் வயிறு வளர்ப்பதும் தொழிலாகவே நம் நாடு நடத்தப்பட்டிருக்கிறது. இவையனைத்தும் அன்னியனுக்கும்பெண்களுக்குமே ஒழிய பார்ப்பானுக்கல்ல பார்ப்பானுக்காக இருந்தால்சாஸ்திரிகூட தலைவலிக்குக் காப்பிக்கடைக்கு எல்லார் எச்சிலும் உருண்டு கலக்கப்பட்ட ஒரு கோப்பைத்தண்ணீருக்குப்போவானா? வைதீக கருமத்திற்கு வரும் எந்தப்பாப்பான் காப்பி குடிக்காமல் சோற்றுக்கும் தக்ஷிணைக்கும் வருகிறான்? அங்கு தின்ற பெரும் தீனி வயிற்று உப்பிசத்திற்கு வேப்பங்கட்டி சுக்குத்தண்ணீரை விட்டுவிட்டு சோடா கடைக்குத்தானே ஓடுகிறான். (வேப்பங்கட்டி என்பது மிளகாய் புளி பெருங்காயம் எலுமிச்சைத் தழை இலைகளை இடித்து விருந்தில் வயிறு பொறுக்காமல் தின்னும் வைதீகர்களுக்கு விருந்தின் கடைசியில் கொடுப்பது)

சாஸ்திரப்படியே பார்ப்போம்- பிராமணன் ஒழுக்கம் சரியாய் பழகி கணக்குப்பிரகாரம் செய்பவன்- அவன் சொல்லும் வேதத்தில் ஒரு சுரம் தவறினால் தோஷமென்று கற்பிக்கப்பட்டவன். இவன் தேவாம்சம்-நாற்றம் ஒருசிறிதும் இவனிடமில்லாதிருக்க வேண்டியவன்- சத்துவ குணப்புசிப்புடையவனானதினால் மலம் நாற்றம் குறைந்திருக்க வேண்டும்-ஆனதால் இவனுக்குத்தண்ணீரும் மண்ணும் கழுவும் அளவும் குறைந்திருந்தால் போதும் "சூத்திரன் மூட்டாள்" கண்டதைப் புசிப்போன், ஒழுக்கமில்லாதவன். பார்ப்பான் உண்டு கழித்த மிச்சத்தை உண்பவன்- "பெண்களோ அறியாமை யுடையவர்கள்" ஆக்கிப் போட்டதின் அடி வண்டலும் புருஷன் எச்சிலிலையின் மிச்சமும் உண்பவர்கள். இவர்களுக்குத்தான் சரியாய் சுத்தம் பண்ணத்தெரியாது-மல நாற்றமும் அதிகமிருக்கும். தண்ணீரும் மண்ணும் தரமும் அதிகம் வேண்டும் அப்படியில்லாவிட்டாலும் தண்ணீரும் மண்ணும் எல்லோருக்கும் ஒரே அளவாகவாவது இருக்கப்படாதா? ஆணுக்குப் பெண்ணும் பிராம

இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

# இதிகாசங்கள்.

## இராமாயணம் அயோத்யாகாண்டம்

### கட்டுரை 3

**(திரு. சந்திரசேகரப் பாவலர் எழுதுகிறார்.)**

பரதனுக்குப் பட்டம் கிடைக்க உபாயம் கூறக் கேட்ட மந்தரை மிகவும் மகிழ்ச்சியடைந்து "உபாயம் என்னைக்கேட்கிறாயா? உனக்கு ஞாபகமில்லையா? இருந்தாலும் சொல்லுகிறேன் கேள்" என்றாள். கைகேயி எழுந்து படுக்கையில் உட்கார்ந்தபடியே "பரதனுக்குப் பட்டம கிடைக்க வேண்டும். இராமனுக்கு ஒரு நாளும் கிடைக்கக்கூடாது உபாயம் சொல்" என்றாள். மந்தரை "முன்னொருகாலத்தில் தேவாசுர யுத்தம் நடந்தபோது தோல்வியுற்ற தேவர்கள் தசரதனை உதவி செய்யும்படி வேண்டினார்கள் அப்போது தசரதன் தன்னைச் சேர்ந்த மகரிஷிகளையும் உன்னையும் அழைத்துக்கொண்டு தெற்கில் தண்டகாரணியத்தில் மீனக் கொடியையுடைய சம்பரனென்ற மகாசூரன் அரசாளும் வைசயந்தபுரத்தை நோக்கிச்சென்றான். அவ்வசுரனே மகாமாயாவி. தேவர்களால் வெல்லமுடியாதவன். இந்திரனுடன் அடிக்கடி போர்புரிந்து பகலில் காயப்பட்டவர்களை இரவில் தூங்கும்போது அசுரராற் கொல்விக்கிறவன். தசரதன் அவர்களுடன் கொடிய போர் செய்கையில் அசுரர்கள் அவனை அம்பாலும் வாளாலும் மிகவும் காயப்படுத்தினார்கள். அவன் மூர்ச்சையடைந்து அறிவு தப்பினான். அப்போது நீ சேனா வேறிடத்திற்கு ஓட்டிக்கொண்டுபோய் சைத்தியோபசாரஞ் செய்து உணர்வு வரச்செய்தாய். அசுரர்கள் அங்கேயும் வந்து அம்பெய்து அடிக்க அங்கிருந்தும் அவனை வேறிடத்திற்குக் கொண்டுபோய் பாதுகாத்தாய். இவ்வாறு இரண்டு முறை அவனுடைய உயிரைக்காத்தாய். அவன் உனக்கு இரண்டு வரங்கள் கொடுக்க அவைகளை நீ சமயம் வாய்க்கும்போது கேட்கிறேனெனக் கூறினாய். அவைகளை இப்போது கேள். அவைகளால் இராமன் முடிசூட்டிழந்து காட்டுக்குப் பதினான்கு ஆண்டுகள் போகவும் பரதன் நாடாளவும் கேள் பதினான்காண்டுகளுக்குள் பரதன் குடிகளின் பிரீதியைப்பெற்று இராமனால் அசைக்கமுடியாத ஆட்சியை அடைவான். தசரதனிடம் வரம் கேட்கும் உபாயத்தையும் சொல்வேன் கேள் கோப அறையை யடைந்து அலங்கோலமாகக் கிடக்க வேண்டும். அவன் உன்னிடம் மிகவும் மையலுடையவன். அதனால் உனக்காக நெருப்பிலும் விழுவான், உயிரையும் விடுவான். உன் அழகு அத்தகையது. அவனை வாக்குறுதி செய்யச்செய்து பின் வரங்களைச் சொல் இராமனை எப்படியாவது காட்டுக்கு அனுப்பவேண்டும்" என்றுகூறினள். கைகேசி அதைக்கேட்டு ஆவேசமடைந்து "உன்னைப்போல் அறிவுற்றவர்களை இந்த உலகத்தில் கண்டதில்லை. என் எண்ணம் நிறைவேறினால் உனக்கு வேண்டிய பரிசுகள் தருவேன். உன்னைப்போலும் அழகும் அறிவுமுடையவர்களை நான் கண்டதே இல்லை" என்று அவளைப் பலவாறு புகழ்ந்தாள். கூனி அவளை கோப அறைக்குப் போகத் தூண்டினள். கைகேசி அவ்வாறே கோப அறையையடைந்து தன் நகைகளை யெல்லாம் கழற்றி எறிந்துவிட்டு அலங்கோலமாகப் படுத்துக்கொண்டு "நான் நினைத்தது முடிப்பேன். இராமன் முடி சூட்டினால் இங்கேயே உயிர்விடுவேன்" என்றாள். மந்தரை மறுபடியும் "எப்படியாவது பரதனுக்கு பட்டங் கிடைக்கச் செய்" என்றாள். தனக்குத் தெரியாமல் இவ்வளவு தந்திரமாக இராமனுக்கு முடிசூட்ட தசரதன் முயன்றதை நினைக்க நினைக்க கைகேசி மிகவும் சினங்கொண்டவளாய் "இராமன் காட்டுக்குப் போகவில்லையென்றால் நான் உயிர்வாழேன்" என்று புகன்றாள். தான் நினைத்த காரியம் முடிந்துவிடுமென அறிந்த மந்தரை மகிழ்ச்சியடைந்தாள். இவ்வரலாற்றை ஆராய்வோம்

மேலேகண்ட வரலாற்றில் மந்தரை தன் தலைவியின் நன்மையில் எவ்வளவு கவலையுடையவளாயிருந்தாளென்று புலனாகின்றது தலைவிக்கு நன்மை தேடுவதில் கூனியைப் போன்ற சிறந்த வேலைக்காரர்கள் அமைவது அருமையே. கூனி கடைசிவரையில் தன் தலைவியை விட்டுப்பிரியாமல் நின்று வேண்டும் நன்மைகளைக் கூறுகிறாள். இவ்வரலாற்றாலும் கூனிக்கேனும் கைகேசிக்கேனும் தசரதன் கேகய மன்னனிடம் கைகேசி மகனுக்கே (பரதனுக்கே) அரசைத் தருவதாகச்செய்து கொடுத்த சத்தியம் தெரியாதென்பதே அறிய இருக்கிறது. இவ்வளவு தூரம் சிரமப்பட்டு முயற்சி செய்கிறவர்களுக்கு அவ்வுண்மை தெரியுமேல் மிகவும் சுலபமாய்விடும். அதற்காகப் பாடுபடவெல்லாம் படவேண்டுமென்ற அவசியமில்லாது போய்விடும். தசரதனும் அவ்வுண்மை வெளிப்படுமேல் இராமனுக்கு முடி சூட்டல் நின்றுவிடுமெனவே அஞ்சுகிறான். ஒருவேளை கைகேசியிடத்தில் அவன் முன்னரே கலந்து இவ்வேற்பாடுகள் செய்திருந்தானென்றால் இச் சதியாலோசனைக்கு அவள் ஒருவேளை இடங்கொடாமலிருந்தாலும் இருந்திருக்கலாம். நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்குமல்லவா? மறைவுறப்பட்ட பழிமொழி தெய்வம் பறையறைந்தாங்கு ஓடிப்பறக்கும். ஆதலினாலே தசரதன் செய்த சூழ்ச்சியும் புத்திரத்துரோகமும் உலகமறியப் பரவும் காலம் வந்துவிட்டபடியால் மந்தரை அதற்குக் காரணமாகி முன் வருகிறாள். உண்மை தெரியாமலே அவள் வேறு வகையாக முயன்றாலும் பின்னர் தசரதனுடைய சதியாலோசனை வெட்ட வெளிச்சமாகின்றது. தன்னை மறைத்து அரசன் செய்த சூதை அறிந்த கைகேசி அவன் மீது அடக்கமுடியாத சினமுறுகிறாள். நிற்க.

இவ்வரலாற்றில் தேவாசுர யுத்தம் நடந்ததாகக் கேள்வியுறுகிறோம். தேவர்கள் அசுரர்கள் இவர்களைப் பற்றிய விரிவான ஆராய்ச்சியை இராவணனைப்பற்றி [illegible] வரும்போது நிகழ்த்துவோமென முன்னரே தாடகையைப்பற்றிய ஆராய்ச்சியிற் கூறினோம். இருந்தாலும் இவ்விடத்து சம்பராசுரனுக்கும் இந்திரனுக்கும் நடந்த போரைப்பற்றிய குறிப்பு வருதலால் இரண்டொன்று அவர்களைப்பற்றிச் சுட்டுவது அவசியமாகிறது

தேவாசுரப் போரென்பது ஆரியருக்கும் தமிழருக்கும் நடந்த போரேயாம் என்பது இவ்வரலாற்றால் இனிது விளங்குகின்றது தேவர்கள் சுராபானம் (கட்குடி) பண்ணியதால் சுரரெனப்படுவர் தமிழர் சுராபானம் பண்ணாமையால் அசுரரெனப்படுவர். ஆரியராகிய சுரரால் எழுதப்பெற்ற இராமாயண முதலிய நூல்களில் சுரராகிய ஆரிய மக்கள் மேலோரெனவும் அசுரராகிய தமிழ் மக்கள் மூடரெனவும் கூறப்பெறுகின்றனர். தமிழ் மக்கள் மிகவும் தீயோராக அந்நூலில் காட்டப்பெறுகின்றனர். இதன் வரலாறெல்லாம் பின்னர் இராவணனைப்பற்றி வருமிடத்து விரித்தாராய்வோம்.

சம்பரன் தமிழ்நாட்டையாண்ட பாண்டியன்- அவன் பாண்டியனென்பது அவன் மீனக்கொடியை யுடையவனாகக் கூறப்படுவதால் விளங்கும்- மீனக்கொடி பாண்டியர்க்கே உரியது. பாண்டியர்கள் இந்திரனை மதியாதோரெனத் திருவிளையாடற் கதைகள் கூறுகின்றன. சம்பரன் இந்திரன் முதலிய தேவரை எதிர்த்து முறியடித்துப் பலவாறு வருத்த அதனால் மெலிவடைந்த இந்திரன் தன்னை யொத்த ஆரிய மன்னனாகிய தசரதனையடைந்து தனக்கு உதவிவேண்டுகிறான்- அவனும் மிக மகிழ்ந்து கைகேசியையும் மகரிஷிகளையும் அழைத்துக்கொண்டு சம்பரனோடு சண்டைக்குப் போகிறான். மகரிஷிகளென்போர் பெண்டுபிள்ளைகளோடுவாழ்ந்து வந்தவர்களாகவே காணப்படுகின்றனர்- அவர்கள் அங்கங்கே அந்நிய நாடுகளிற் சென்றுதங்கி நல்லவர்களைப்போல பாசாங்குசெய்து வாழ்ந்து உளவறிந்துவந்து தங்கள் ஆரியமன்னர்களிடம் கூறித் தமிழ்மன்னரை வெல்லும்படி சூழ்ச்சிகள் சொல்லும் உழவர்களேயாவர்- ஆதலினாலேயே தசரதனும் அவ்வுழவர்களாகிய மகரிஷிகளையும் சண்டைக் கழைத்துச் சென்றானென்று வால்மீகி கூறுகிறார்- இல்லையென்றால் இரும்படிக்கிற இடத்தில் ஈக்கு என்ன வேலை என்பதுபோல் சண்டையிடு மிடங்களில் தவம் செய்யும் ரிஷிகளுக்கு என்னவேலை யிருக்கும்!

போருக்குச்சென்ற தசரதன் உயிர்பிழைத்தது தம்பிரான் புண்ணியமாயிற்று. கைகேசி இரண்டுமுறை அவனுடைய உயிரைப் பாதுகாக்கிறாள் சம்பரமன்னனுடைய தலைநகராகிய வைசயந்தபுரம் தண்டாரண்யத்துள்ளது- அது இதுவென அறிஞர் ஆராய்வாராக

இனி இவ்வரலாற்றைக் கம்பர் எவ்வாறு புரட்டியெழுதுகிறாரென ஆராய்வோம். தூங்கியிருந்த கைகேசியைச் சத்தமிட்டெழுப்பிய கூனியை கைகேசியின் காலைத் தொட்டெழுப்பினாள் என்று பொய்கூறியதற்கேற்ப கம்பர் இவ்விடத்தும் கைகேசி தன் மகன் பரதனுக்கு முடிபெறக் கேட்டவுடன் கூனி அவளுடைய அடியைத் தொழுது கொண்டு வரங்கள் கேட்கக் கூறுகிறாளெனக் கூறுகிறார். அது அடிமைத் தன்மையைப் பரவச் செய்யும் குணம் கம்பரிடமிருந்ததற் கறிகுறியாகும்- இவ்விடத்து வால்மீகியோ கூனி வேறு செயல புரியாது தந்திரங்களைக் கூறுகிறாள் என்று மட்டும் கூறுகிறார்- அவள் கூறுகிற தந்திரங்களின் விவரமெல்லாம் கம்பர் மறைத்தார்- மேலும் சம்பரன் மீனக்கொடியுடையவன் என்பதையும் அவர் மறைத்தார்- மேலும் தசரதன் மிகவும் காமக்கிறுக்குடையவன்; கைகேசி மையலுக்காகத் தன் உயிரையும் கொடுப்பானென் றெல்லாம் கூனி தசரதனைப்பற்றிக் கூறும் உண்மைகளையெல்லாம் கம்பர் மறைத்துவிட்டார்- ஏனென்றால் தசரதனை மிகவும் உத்தமனென்று தாம்உலகத்தாருக்குச் சித்திரித்துக் காட்டவிரும்பும் தம்முடைய முயற்சிக்கு இவ்வுண்மைகளெல்லாம் மாறுகின்றன.

பரதன் முடிசூடலுக்குஉபாயங்கூறு என்று கைகேசி கேட்டவுடனே கூனி அவளை நோக்கி "என் தோழி வல்லள், என் துணை வல்லன்" என்று அடிதொழுது தனது மகிழ்ச்சியைக்காட்டினள் என்று கூறுகிறார் கம்பர். இவ்வளவு தூரம் அற்ப மதியுடையவளாகக் கூனியை வால்மீகி காட்டவில்லை- கடைசியாக கைகேசியைத் தூண்டித் தூண்டிக் கடிந்து பேசி அவளைத் தயார் செய்து அவள் அலங்கோலமாகக் கிடந்த பின்னரே தனக்குத் தானே கூனி மகிழ்ச்சி யடைந்ததாக வால்மீகி கூறுகிறார் கைகேசி அவளை எவ்வளவோ புகழ்கிறாள்., பல நகைகள் தருகிறாள். அப்போதெல்லாம்கூட அவள் மகிழ்ச்சி காட்டியதாக வால்மீகி கூறவே இல்லை. இவ்வாறாகவும் இவ்வளவு திறமையுள்ள கூனியைச் சாதாரணமாகவெள்ளறிவாட்டிபோல மகிழ்ந்தாளெனக் கம்பர்கூறுகிறார்.

"நன்று சொல்லினை நம்பியை நளிர் முடி சூட் [டல்

துன்று கானத்திலிராமனைத் துரத்தலிவ்விரண் [டும்

அன்றதாமெனில் அரசன்முன் ஆருயிர் துறந்து

பொன்றி நீங்குதல் புரிவென்யான் போதி நீ [என்றாள்.

கூனி போனபின் குலமலர்க் குப்பை நின்றிழி [ந்தாள்'

... ... பின் அலங்

[இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க]

# அழுக்காறாமையும் திருவள்ளுவரும்.

கட்டுரை 18.

(சாமி. சிதம்பரனார் எழுதியது)

புறத்தூய்மையைக்காட்டிலும் அகத்தூய்மையே மேன்மையைத் தருவதாகும். புறத்தூய்மையை எளிதாகச்செய்துகொள்ளலாம். அகத்தூய்மையை உண்டாக்கிக்கொள்வது மிகவும் கடினமானசெயலேயாகும். அகத்தூய்மை யுண்டாவதற்கு முதன்மையாக மேற்கொள்ளவேண்டிய குணம் பொறாமைப்படாதிருத்தலேயாகும். அழுக்காறுஎன்பது பொறாமை என்னும் பொருளில் வரும் செந்தமிழ்ச்சொல். அழுக்காறாமை என்பது அழுக்காறு என்பதற்கு எதிர்மறையாகப் படாமைஎன்னும் பொருளில்வரும் செந்தமிழ்ச்சொல்லாகும். ஒருவன் தனக்குச்சிறந்தஒழுக்கமாகக் கொள்ளவேண்டியது பொறாமைப்படாததன்மையேயாகும்- இவ்வியல்பை நெஞ்சிற்கொள்வானாயின் அவனேசிறந்த ஒழுக்கமுடையவனாவான். இதனை (1) **"ஒருவன் தன்னெஞ்சில் பொறாமை இல்லாத தன்மையையே ஒழுக்கமாகக் கொள்ள வேண்டும்" என்னுந் திருக்குறளால்** அறியலாம்.

யாவரைப்பார்த்தும் பொறாமையடையக்கூடாது. யாருக்கும் தம்பகைவர் மாட்டுப் பொறாமையுண்டாவதியல்பு- தன்னைவிடபகைவர்க்குச்செல்வமோ புகழோ உண்டானபோது அவற்றைக்கண்டு மனம்பொறாது அவர்பெற்ற செல்வத்தையோ புகழையோ அழிக்க வழிதேடும்படி முயல்வதும் இயல்பு- இவற்றிற்குக் காரணம்பொறாமையேயன்றி வேறொன்றுமன்று- ஆதலால் யாரிடத்தும் பொறாமை கொள்ளாதிருக்குந்தன்மையைப்பெற எவரும்முயற்சி செய்ய வேண்டியது முதற்கடமையாகும். அத்தன்மையையெய்திவிட்டால் அதுவேசிறந்த செல்வமாகும்- அதைவிட சிறந்த செல்வம் பிறிதொன்றுமில்லை, இதனை (2) "யாவரிடத்திலும் பொறாமைப்படாது விலகியிருக்குந் தன்மையை ஒருவனடைவானாயின், பெறக்கூடிய மேலான செல்வங்களுள் அதைப்போன்ற செல்வம் வேறொன்றில்லை" என்னுந்திருக்குறளால் அறியலாம்.

பொறாமைப்படுகின்றவனுக்கு சீரிய அறவொழுக்கமும் உண்டாகாது; இன்பத்தையடைவதற்குக் காரணமான செல்வமும் உண்டாகாது. எவ்வாறெனில் பிறர்செல்வத்தைக்கண்டு பொறாமையுண்டானவுடன் அவர்செல்வத்தை அழிப்பதற்குரிய எண்ணமுண்டாகக்கூடும். அவ்வெண்ணத்தை நிறைவேற்றவேண்டுமாயின் பலவஞ்சகமான தீய காரியங்களைச்செய்யவேண்டி நேரும். அன்மையிலில்லாவிட்டாலும் நீண்டநாள் சென்றேனும் தான் செய்தவஞ்சகமான தீயசெய்கைகள் வெளியாகிவிடும்- வெளியாகிவிடவேதன்னைப்பலரும் இழித்துக்கூறத் தலைப்படுவார்- பலருடைய பகை சேர்ந்து அதனால்தானுங் கெட்டுவிட நேருவதும் திண்ணம். ஆதலாற் பிறர்செல்வத்தைக்கண்டு பொறாமையடைதல் ஒரு சிறிதும் கூடாதசெயலாகும்- இதனை (3) "நல்லொழுக்கத்தையும் செல்வத்தையும் கண்டு விரும்பாதவன்தான், பிறன் செல்வத்தைக்கண்டுமகிழாமல் பொறாமைப்படுபவனாயிருப்பான்" என்று திருவள்ளுவர் கூறுவதனாலுணரலாம்.

எந்தச்செயலையும் ஆராய்ந்து செய்தலே சிறந்ததாகும். செல்வம், கல்வியுடையவர்களுக்குத் தீங்குசெய்ய நினைப்பதாலும் செய்வதாலும் தனக்கே தீங்குண்டாகும்- அவர்கள் தீங்குசெய்கின்றவர்களாயிருப்பின் அவர்களே அழிந்துவிடுவார்களென்பது. அவர்களுக்குத் தீங்குசெய்யவேண்டுமென்ற எண்ணமுண்டாவதற்குக் காரணம் பெரும்பாலும் பொறாமையாகத் தானிருக்கவேண்டும்- பொறாமைகாரணமாக நாம் பிறர்க்குத் தீங்குசெய்து, அத்தீமை காரணமாக நாமே கெட்டுவிடும் நிலைமைக்குவந்து விடுகின்றோம். ஆதலால் அறிவுடையவர்கள் பொறாமைகாரணமாகத்தீங்குசெய்வதை நினைக்காமலிருப்பதே அறிவுடைமைக்கு அழகாகும். இதனை, (4) "தீமை செய்வதனால் தமக்குண்டாகுங் கெடுதியையறிந்து" அறிவுடையவர்கள் பொறாமை காரணமாகப்பிறர்க்குத் தீங்குசெய்யமாட்டார்கள்; என்னுந் திருக்குறளால் அறியலாம்.

பெரும்பாலும் ஒருவர்க்குத் தீங்குண்டாவதற்குக்காரணம் அவர்களுடையபகைவர்களாகவேயிருப்பார்கள்- ஆனால்பொறாமைத்தன்மையுடையவர்களுக்கு அவர்கள் பகைவர்களால்தான் தீங்குண்டாகுமென்பதில்லை- பகைவர்களையல்லாமலுந் தீகுண்டாகும்- பகைவர்களையல்லாலும் தீங்கு நேருவதற்குக் காரணம் பொறாமையேயாகும்- எல்லாத்தீங்குகளையும் தருவதற்குப் பொறாமையொன்றேபோதுமானது- இதனை (5) "பொறாமையுடையவர்கட்குத் தீமையுண்டாவதற்கு அப்பொறாமையே போதுமானதாகும். பகைவரையல்லாமலே அதுவே கேடுதரக் கூடியதாகும்' என்னுந் திருக்குறளாலுணரலாம்.

தாம் ஒருவர்க்கும் உதவிசெய்யாவிடினும், பிறர்செய்யும் உதவியையேனும் தடுக்காமலிருக்க வேண்டும். மற்றொருவர் பிறர்க்குக் கொடுப்பதைப்பார்த்துப் பொறாமைப்பட்டால் அதைத் தடுக்கநேரும்- அதனால் தனக்குப்பலருடையபகையும்உண்டாகித்தனது செல்வமெல்லாம்கொள்ளை போகுமென்பது உறுதி- தனது செல்வமெல்லாம் கொள்ளைபோய்விடுமாயின் தானும் தனது சுற்றமும் வறுமையால் வாட்டமடையும்படியான நிலைமையுண்டாகும்- அவ்வாட்டமும் உண்ண உணவும் உடுக்க உடையும் கிடைக்காத பெரிய வாட்டமாகும். ஆதலால் பிறர்க்குக்கொடுப்பதைக்கண்டு பொறாமைப்படுவது பெருந்தீங்கிற்குக்காரணமாகும். இதனை (6) ஒருவன் பிறர்க்குக்கொடுப்பதைக்கண்டு பொறாமைப் படுவானாயின் அவனும் அவன் சுற்றமும உடுக்கஉடையும் உண்ணஉணவுங்கிடைக்காமற் கெட்டுவிடுவான்" என்னுந் திருக்குறளால் அறியலாம்.

பொறாமையுடையவன் செல்வமுடையவனாயிருப்பினும், அவன் செல்வத்தையிழந்துவிடுவான். செல்வத்தின் தெய்வமாகிய இலக்குமியென்று சொல்லக்கூடியவள், தானும் அப்பொறாமை யுடையவன்மீது பொறாமைகொண்டு, அவனை வறுமைக்குத் தெய்வமாகிய மூத்தவளிடம் காட்டிக்கொடுப்பாளாம்- செல்வம் இளையவளுக்குரியதென்றும், வறுமை மூத்தவளுக்குரியதென்றும் கூறுவதுமரபு- இதனை (7) "பொறாமையுடையானைத்தானும் பொறாமைப்பட்டுத் திருமகள் தனது மூத்தாளுக்குக்காட்டிவிடுவாள்" என்னுந் திருக்குறளாலுணரலாம். இலக்குமி, மூதேவியென்று உண்மையாகப் பெண்மக்கள் வடிவமான தெய்வங்கள் இல்லை. ஆனால் செல்வத்தை இலக்குமி என்றும் வறுமையை அவளுடைய அக்காளென்றும் உருவகப்படுத்திப்புனைந்து கூறப்பட்டிருக்கின்றது.

அழுக்காறு என்று சொல்லக்கூடியது எத்தகைய திறமை யுடையவரையும் கெடுத்துவிடும்- நம்மை நல்வழியிற் செலுத்துதற்கு எவ்வளவு துணைவர்களிருப்பினும் அவர்களெல்லாம் ஒன்றுஞ்செய்யமுடியாத நிலைமை வந்துவிடும். நம்முடைய செல்வத்தைநாம் எவ்வளவு பாதுகாப்புடன் வைத்திருந்தாலும், நாம் தீயநெறியிற்செல்லாது நன்னெறியிலொழுகவேண்டுமென்ற எண்ணமுடனிருந்தாலும், பொறாமை நம்மிடமிருக்குமாயின் அப்பொறாமையென்னும் பாவியானவன் நமது செல்வத்தைக்கெடுத்து நம்மையும் தீயவழியிற் செலுத்திவிடுவான் இதனை (8) "பொறாமையென்று சொல்லப்படுகின்ற ஒருபாவியானவன் செல்வத்தைக்கெடுத்துத் தீயவழியிலுஞ் செலுத்திவிடுவான்" என்னுந் திருக்குறளால் அறியலாம். தீயவழியிற்செல்வதால் துன்பமுண்டாகும்- அத்துன்பந்தான் நரகமென்றும் சொல்லப்படுவது.

பொறாமையுடையவன், பொறாமைப்பட்டு வருந்துவானேயன்றித்தனக்குரிய செல்வத்தைக் காப்பாற்றிக்கொள்ளவோ, மேலும் மேலும் செல்வத்தைச்சேர்த்துக்கொள்ளவோ முயற்சிசெய்ய முன்வரமாட்டான். ஆகையினால் வறுமையடைந்திருப்பான்- பொறாமைப்படாதநல் மனத்தையுடையவன் யாதொரு தீங்குமின்றிச் செல்வத்தையுடையவனாயிருப்பான்- இவைதான்இயற்கையாகும் ஒருகால் பொறாமையுடையவனிடம் செல்வமும், நடுநிலைமை யுடையவனிடம் வறுமையுமிருக்குமாயின் அதுமிகவும் வியப்படையத்தக்கதாகும்- அவ்வாறிருப்பதில்லை- இருக்குமாயின் அவ்வாறு நேருவதற்குக்காரணம் என்ன என்பதை ஆராய்ந்துதான் தெரிந்துகொள்ளவேண்டும். இதனை (9) "பொறாமைபொருந்தியமனமுடையவனுக்குச் செல்வமும் நல்லநெஞ்சத்தையுடையவனுக்கு வறுமையும் இருக்குமாயின் அவை ஆராய்வதற்குரிய செய்தியாகும்" என்று திருவள்ளுவர் கூறுவதனால் உணரலாம்- அவ்வாறு இருப்பதில்லையென்பது இக்குறளாலேயே பெறப்படுகின்றது.

பொறாமைப்படுகின்றவர்கள் ஒருநாளும் முன்னேற்றமடையமாட்டார்கள். பொறாமைப்படாதவர்கள் ஒருநாளும்பிற்போக்கடையமாட்டார்கள்- ஆகவே ஒருவருடைய முன்னேற்றத்திற்கு முதற்காரணம பொறாமையின்மையும்பிற்போக்கிற்கு முதற்காரணம் பொறாமையுமே யாகும்- இதனை (10) பொறாமைப்பட்டு உயர்வடைந்தவர்களுமில்லை, பொறாமைப்படாதவர்களுள் உயர்வினின்றும் இழிந்தவர்களுமில்லை" என்னுங்குறளால் உணரலாம்

இதுகாறுங் கூறியவாற்றால் பொறாமை யில்லாதிருத்தலே நல்ல பழக்கமென்றும் பொறாமையில்லாதிருத்தலே செல்வம் அடைவதற்கும் நல்வழியில் செல்வதற்கும் இன்பமடைவதற்கும் காரணமாகுமென்றும் பொறாமையே வறுமையடைவதற்கும் தீயநெறியில் செல்வதற்கும் துன்பமடைவதற்கும் காரணமாகுமென்றும், ஒருவன் பிற்போக்குக்குப் பொறாமையும், முற்போக்குக்குப் பொறாமையின்மையுமே காரணமென்றும் அறியலாம்

---

## காரைக்குடி
## நலஉரிமைத்தொண்டர் சங்க
## முதலாவது ஆண்டுவிழா.

நிகழும் விபவ ஆண்டு புரட்டாசித்திங்கள் 19, 20ம் தேதிகளாகிய இரண்டு தினங்களிலும், திருவாளர்கள் சொ.முருகப்பசெட்டியார், பி எஸ்- சுப்பரமணியய்யா, சாமஸ்பாலய்யா ஆகியவர்களின் அக்ராசனத்தின்கீழ் ஷை விழா நடைபெற்றது.

ஐ. பெரி. சி. மெய்யப்பன் காரியதரிசி

---

பஞ்சாங்கய்யர்:—முன்போல்நமக்கு வரவு இல்லையே? ஊரில்கல்யாணம் முதலியவிசேஷங்கள் இல்லைபோலிருக்கிறது

ஒருவர்.—விசேஷங்கள் இல்லைஎன்று நினைக்க வேண்டாம். முன்போல் பிராமணரைக்கொண்டு தான் நடத்தவேண்டும் என்ற மூடக்கொள்கை இப்போது அதிகம் இல்லை

# "இந்தியமாதா"

(திரு. அய்யாமுத்து எழுதுவது.)

## குப்பைக்காரி.

உலகத்தின் பல பாகங்களையும் சுற்றி பற்பல தேயத்தினரும் வாழும் முறையை நேரில் கண்டறிந்து அறிவு வளர்ச்சி பெறும்நோக்கத்துடனே இவ்வமெரிக்க மிஸ் மேயோமாது இந்தியாவுக்கும் போந்ததாகக் கூறுகின்றார். இவர் இந்தியாவில் பல முக்கிய விடங்களையும் பார்த்தார். உத்தியோகஸ்தர்கள், வைத்தியர்கள், தனவந்தர்கள், ஏழைகள், ஆசிரியர்கள், பிரமுகர்கள், இளவரசர்கள், ராஜீய வாதிகள், ராஜாங்க நிர்வாகிகள், மதத் தலைவர்கள் ஆகியவர்களிடம் சென்று சம்பாஷித்து விஷயங்களறிந்திருக்கிறார். கல்விச்சாலைகள், வைத்தியசாலைகள், தொழிற்சாலைகள், தனவந்தர் வீடுகள், குக்கிராமங்கள், சட்டசபைகள் முதலிய விடங்களுக்கு சென்று ஆங்காங்கு நிகழ்பவைகளைக் கேட்டுக் கண்டார்.

இந்தியாவின் கலையையும், காவியங்களையும், ஓவியங்களையும், சிற்பம், சித்திரம் ஆகியவற்றையும், ஆத்மஞான வளர்ச்சி, மதமாதியவற்றையும், பற்றி ஒன்றும் எடுத்துக்கூறாமல், இந்து மக்களிடையே காணப்பெறும், சோம்பல், அறிவீனம், மூடநம்பிக்கை, நோய், சுகாதாரமின்மை, ஆகிய கொடியனவற்றையே பிரஸ்தாபித்திருக்கிறார். இதனால் இவ்வம்மையை 'குப்பைக்காரி'யென்றும், 'பன்றுடை'யென்றும் 'சாக்கடை இன்ஸ்பெக்டர்' என்றும், பலர் பலவிதமாகக் கடிந்து கொண்டனர். ஆனால் இங்ஙனம் கடிந்தவர் குப்பைக்காரியுடையவும், பன்றுடையுடையவும், சாக்கடைகாரியுடையவும் அரிய சேவையைப் புகழ்ந்தார்களில்லை. குப்பைக்காரியால் உங்கள் குப்பைகளைக் கூட்டிப் பெருக்கி அப்புறப்படுத்த சமயம் பெற்றீர்கள். பன்றுடையால் உங்கள் கசடுகளைப் போக்கிக்கொள்ள இதோ தருணம் வாய்த்திருக்கிறது. சாக்கடை நாற்றம் அறிந்த பின்னர் அதைக் கழுவிக் கொள்ள இதோ உங்களுக்கு நல்ல சந்தர்ப்பத்தை இவ்வமெரிக்க மாது அளித்திருக்கிறார் அவர் மீது சீறி விழுந்து, ஓங்காரமிட்ட வீரர்காள்! எழுந்து நின்று பாருங்கள் - மேயோ கூட்டித்திரட்டிக் குவித்திருக்கும் குப்பை கூளங்கள் உங்களுக்குச் சொந்தமானவை. அவற்றைக்கொளுத்தி எறிந்து பிறநாட்டார் முன்னிலையில் உங்கள் மானமற்ற தன்மையைப்போக்க முயலுங்கள். இல்லையேல் அக்குப்பையோடு குப்பையாய் உங்கள் நாடும் நீங்களும் செல்வீர்களென்பது திண்ணம்-

உங்கள் மதங்களையும் காவியங்களையும் மேயோ எடுத்துரைக்காத குறையை நீக்கும் பொருட்டு உங்கள் சரோஜினி தேவியை மேல்நாடு சென்று உங்கள் 'மதத்தன்மையை' பிரசாரம் செய்ய அனுப்பியுள்ளீர்கள். இப்பிரசாரத்தால் நீங்கள் அடையவுள்ள பலன் அணுவளவுமில்லை. உங்கள் தேவிகள் இந்தியாவின் மூலைமுடுக்குகள் சென்று மூடப்பிசாசு, சாதிப்பிசாசு, சமயப்பிசாசு, சாமிப்பிசாசு, கோயில் பிசாசு, நாசிப்பிசாசு, ஆகிய பைசாசங்களை விரட்டுவார்களானால் அதுவே உங்களுக்குப் பலனைத்தரும். உங்கள் ஏடுகளில் உங்கள் மதத்தன்மை எப்படி அச்சிடப்பட்டிருந்தால் தான் என்ன? உங்களுடைய நித்ய வாழ்க்கையில், நீங்கள் உங்கள் அண்டை வீட்டுக்காரனோடு நடந்து கொள்ளும் பாவனையில் அல்லவா உங்கள் உண்மையான மதத்தன்மை பிரகாசிக்கிறது. பிரத்யட்சக்காட்சியல்லவா மதத்துக்கும் கலைக்கும் சாட்சியங்களாகும்.

### வெறும் பேச்சு.

ஹே! வெறும் பேச்சுப்பேசும் வீணர்களே! மேயோ கூறுவதைக் கூர்ந்து கவனியுங்கள்.

"உதாரணமாக பன்னிரண்டு வயதுள்ள ஒரு இந்தியச்சிறுமியை எடுத்துக் கொள்ளுவோம். உடம்பில் எலும்பும் தோலும் தவிரவேறொன்றுமில்லை. அச்சிறுமியோ கல்வி பயிலாதவள்; அறிவைப் பெறாதவள், தேக சௌக்கியத்தை எவ்வாறு பாதுகாத்துக் கொள்ளவேண்டுமென்பதை எவரும் அச்சிறுமிக்குக் கற்பிக்கவில்லை. இந்நிலைமையில், அவள் ஒரு குழந்தையைப் பெற்று விடுகிறாள். இத்துணை நிடாத்திரமுள்ள ஒரு சிறுமிக்குப்பிறக்கும் குழந்தை எந்நிலையிலிருக்குமென்பது நாம் சொல்லாமலே விளங்கும். அக்குழந்தையை தேகப்பயிற்சி செய்ய விடுவதில்லை. சுத்தமான காற்று வசதியுள்ள இடத்தில் தூங்கச் செய்வதில்லை. அக்குழந்தை பால்யப் பருவமடைகிறான். அப்பொழுதும் அவனுடைய தேக சௌக்கியத்தைக் கவலையுடன் கவனிப்பவர் எவருமில்லை. ஆகவே அவனுக்கு முப்பது வயது ஆனவுடன் உடல் மெலிந்து அங்கம் தளர்ந்து ஆண்மை இழந்து வாடி நிற்கிறான்."

ஆனால் 'ராஜீய வாதிகள் மேடைப்பிரசங்கிகள், தேசத்தலைவர்கள்' மதத்தலைவர்கள், மகாச்சாரியார்கள், இன்றைய தினம் இக்கொடுமையான நிலையை மாற்ற எத்தனித்து சட்டசபை விசாரணையிலிருக்கும் இளம் வயது விவாக விலக்கு மசோதாவுக்கு எத்தனை எதிர்ப்புடையதாகப் பிரசாரம் செய்து வருகிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். சங்கராச்சாரிகள் சமூக சீர்திருத்த விஷயமாக எதாவதொரு சட்டம் பற்றும்கால் இம்மதவேஷதாரிகள் எத்துணை கலவரமிடுகின்றனர். மதம் போச்சு-மதத்தில் தலையிடலாமா?-விக்டோரியா மஹாராணி சொல்லை மீறலாமா-என்பதல்லவோ பேச்சு, ஹே! வைதிகப் பிடுங்கல்களே! உங்கள் மதம் என்ற ஆணவம் போகத்தான் செய்யும்; மதத்தின் பேரால் நடைபெறும் உங்கள் வயிற்றுப்பிழைப்பு குன்றத்தான் செய்யும். காலத்தோடு ஒட்டி பொருந்த முயலுவீர்களாயின் உம்ம தத்தைக் காக்க முயலுகிறீர்களோ அம்மதமே அதை ஒழித்து விடுமென்பது திண்ணம். சிறிது நவ மதப்பெருக்கே உங்கள் சான்றாகும். சுபாரியாதைக்கிளர்ச்சியே உங்கள் எமனாகும்!

### சிற்றின்பம்.

என்றதலைப்பின்கீழ்மேயோகூறுவது:

"இந்தியருடைய வறுமைக்கும் அறியாமைக்கும், கல்விக்குறைவிற்கும், தைரியமின்மைக்கும், அடிமைப்பற்றிக்கும் காரணம் அவர்கள் அதிகமாக சிற்றின்பத்தில் உழன்றுவிடப்பதுதான்"

சதாசர்வகாலமும் தாசி வேசிகளுடைய இல்லத்தில் உழன்றுதிரியும் புருடர்களைக்குறித்து இவை கூறப்பட்டதன்று. இந்தியாவில் புலபுலவெனப் புதல்வர்களைப்பெற்று, காப்பதற்கும் வகைபுரியாது கைவிடவும் மனமுமின்றி ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கினைப்போல அகப்பட்டுவிழிக்கும் கோடிக்கணக்கான 'குசேலர்'களைக் குறித்தே இவை கூறப்பட்டவையாகும். குசேலர் ஒருபெரிய பார்ப்பன முனிவர், சாஸ்திரவல்லவர், பக்திமிகுபர்த்தவர். இவரே தமது சிற்றின்ப இச்சையை அடக்காமல் இருபத்தேழு பிள்ளைகளைப்பெற்று காக்கச்சக்தியற்று கடவுளிடம் சென்று தாம் பலபிள்ளைகள்பெற்ற சமார்த்தியத்தைச் சொல்லி பரிசுபெற்றார் என்றால் இவர்சந்ததியிலுதித்த நீங்கள் வேறு எவ்விதமாய் இருக்கக் கூடும்? குசேலர் பெரிய பக்திமானாயிருந்தும், எவ்வளவு சிற்றின்பப் பிரியராயிருந்தார் என்பதை அவருடைய இருபத்தேழு குழவிகள் சாட்சிகூறவில்லையா!

ஒருவீட்டில் ஒருகுழந்தை பிறந்தவுடன் தாயாருக்கு இருக்கும் கவலையென்ன? சீக்கிரம் பெயர்வைக்கவேண்டும், முடியெடுக்கவேண்டும், காதுகுத்தவேண்டும், கல்யாணம்செய்யவேண்டும், சாந்திக்கல்யாணம் செய்யவேண்டும், பெற்றெடுக்கவேண்டும், பிதிரெடுக்கவேண்டும் என்பவைகளேயாகும் இதைவிடச்சத்தியமாய் வேறுஎண்ணம் கிடையாது. "என்னபாட்டி சௌக்கியமா" வென்றால் உடனே கண்கலங்கி சொல்லுவதென்ன? "என்னமோவப்பா எனக்கென்ன சௌக்கியம், காலமெல்லாம் சென்றுவிட்டது, எனது பேத்தி லட்சுமிக்கு சட்டென்று ஒருகுழந்தை பிறந்தால் அதைக்கண்ணாரப்பார்த்துவிட்டு சாகவேண்டுமென்ற ஒரே ஆசைதானிருக்கிறது" என்பாள்- இல்லையேல் "பேரப்பிள்ளைக்கு நான் சாகுமுன்பே கல்யாணம்செய்து பார்க்கவேண்டும்" என்பாள் பிள்ளையென்ற சனியன் உங்கள் பிதிர் லோகத்தையும் விடவில்லையே! சதாசர்வகாலமும் உங்கள்வீடுகளில் பிள்ளைப்பாட்டுத்தான். பிள்ளை! பிள்ளை! பிள்ளை! சாகப்போகும் கிழவன் ஒரு இளங்குமரியைக் கட்டி பிள்ளைபெற ஆசைப்படுகிறான், என்னைப்போல் பிள்ளைபெறாத "பாவிகளை" காண்பவர்களெல்லாம் முதலில்போடும் கேள்விதான் என்ன? "என்னப்பா இன்னும் குழந்தையொன்றும் இல்லையோ" என்பதுவே யாகும்.

இக்கட்டுக்கடங்காத பிள்ளை மோகத்தால் நீங்கள் சுதாசனைக்கற்ற பிள்ளைபெற்றும் இயந்திரங்களாகமாறி உணர்வற்று உயிரற்று சோம்பலுற்று ஆண்மையற்று இருக்கிறீர்கள் என்பதில் என்ன அதிசயமிருக்கிறது! இந்நிலைமை மாறவேண்டுமானால் விவாகவயது உயர்த்தப்படவேண்டும். சந்தானமில்லாத புருடனிருந்தால் அவன் சொத்துக்கள் மனைவியைச்சேரசட்டமியற்றவேண்டும்- ஆணுக்கும் பெண்ணுக்கும் சொத்தில் சமபாகம் வழங்கப்படல்வேண்டும்- அப்போதுதான் இப்பிள்ளைப்பித்துகுறையும் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியை எவனுமே அப்போது கொள்ளமாட்டான்.

மற்றும் நீங்கள் சிற்றின்பப்பிரியர்களென்பதற்கு உங்கள் நாட்டில் எத்தனை சாக்ஷிகள் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்- உங்கள் வீடுகளில் நீங்கள் அழகாகத் தொங்கவிட்டிருக்கும் கிருஷ்ணன் சேலைதிருடிய படங்கள், உங்கள் தேர்களில் செதுக்கப்பட்டிருக்கும் விசித்திர பொம்மைகள்! உங்கள் கோவில்களில் செதுக்கப்பட்டிருக்கும் நிர்வாண விக்ரகங்கள் இவைகளெல்லாம் சாட்சிகளல்லவா? ஏன் உங்கள் 'உயிருள்ள பொம்மைகள்' கோவிலில் நடனமாதர்கள் மற்றொருசாட்சியன்றோ! மனிதரோடு மனிதப்புணர்ச்சி போதாதென்று மனிதரோடு மிருகப்புணர்ச்சியுமுண்டெனக் காட்ட எத்தனை தூரம் உங்கள் சிற்பிகள் பாடுபட்டுத் தேரிழைத்திருக்கிறார்கள்? இது பொய்யா?

மற்றும் உங்கள் நாட்டுப்பத்திரிகைகளிலும் சுவர்களிலும், மாம்வண்டிகளிலும் விளம்பரம் செய்யப்படும் "ஆதங்கநிக்ரஹமாத்திரை" இன்னும் இதுபோன்ற கணக்கற்ற "மன்மததிலகாமணி லேகியங்கள்" "ஸ்தம்பன மெழுகுகள்" வீரியவிர்த்தி லேகியங்கள் முதலியவைகள் நிரூபிக்கும் விஷயமென்ன? "பத்துலட்சம்பேர் வாக்கியுண்டு நரம்புத்தளர்ச்சி நீங்கப் பெற்றார்கள்" என்பதும் "மேகவியாதிகளுக்கு கைகண்டமருந்து" என்பதுமல்லவோ ஒவ்வொரு விளம்பரமும் கூறுகின்றது. பக்கத்தியக்காரு ஊரில் பற்பொடி விற்பவன் அருக்கமாட்டான்என்பதுபோல சிற்றின்பவாய்ப்பட்டு உழலும் மாந்தரில்லாத நகரங்களில் இத்துணை விளம்பரங்கள் செய்யப்படுவானேன்? இதைப்போக்க நீங்கள்என்னசெய்யப்போகிறீர்கள்?

---

## நாமகிரிப்பேட்டை யூனியன்போர்டு எலெக்ஷன்

சென்ற 28—9—28-ல்நாமகிரிபேட்டை யூனியன் போர்டு 2-வது வார்டிலும் 9-வது வார்டிலும் போட்டி ஏற்பட்டு 2-வது வார்டுக்கு ஸ்ரீமான் கே. சவுண்டப்ப செட்டியாரவர்களும் 9-வது வார்டில் ஸ்ரீமான் கொளந்தாகவுண்டர் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்

ஒருநிருபர்

## "தமிழன்"

(ஒரு நிருபர் எழுதுகிறார்)

நமது திருநாடாகிய கோலார் தங்கவயலில் சேலம் S. R. பழனிசாமி அவர்கள் உதவி ஆசிரியாக இருந்து நடத்திவரும் "தமிழன் என்னும் திருநாமம் பூண்ட சுயமரியாதை தமிழ்வாரப் பத்திரிகையைப்பற்றி நமது நேயர்கள் அறிந்திருப்பார்களென்று நினைக்கின்றேன். அதனை ஆதரிப்போரும் வெறுப்போரும் அநேகர் இருக்கலாம், பல நூற்றாண்டுகளாக நமது தமிழ்மக்கள் அடிமைவாழ்வு வாழ்ந்து பழகிவிட்டபடியால் சுயஉணர்வு-சுயமரியாதை எண்ணமே இன்றிப்பரவசப்பட்டு மூடவழக்கங்களுக்கு அடிமைப்பட்டு அல்லலுறுகின்றனர். நமதுசமூக வாழ்விலும் விசாரிப்பதே பாவகரமானதென்ற உணர்ச்சியாளர் பலராவர்.

அதுசமயம் தோன்றிய சில அறிவாளர்களும் கொடிய பார்ப்பனர்களுக்குப் பயந்து உண்மையைக்கூற முடியாமல் பின்வாங்கினர். அயோக்கியப் பார்ப்பனீயமும், வைதீகமும், நம்நாட்டு மக்களை அஞ்ஞானப்படுகுழியில் தள்ளியிருக்கின்றன. நயவஞ்சகப் பார்ப்பனர் ஆதிக்கம் தோன்றினதுமுதல் தமிழர் இசை, தமிழர் நூல், தமிழர்தொழில் தமிழர்வாழ்வு, நாகரீகம் தமிழர்கொள்கை, தமிழர்சொத்து, தமிழர்உரிமை யாவும் நாளுக்கு நாள் அழிக்கப்பட்டு வருவதைச் சிறிதுகூர்ந்து நோக்குவாரும் அறிவர்.

அரசியல் பெயராலும், மதத்தின்பெயராலும், பார்ப்பனர்களும் கோடாரிக்காம்புகளான வயிற்றுப்பிழைப்புக்காரர்களும் நமது பாமர மக்களுக்கு அயோக்கிய மாயவலைவீசி, வஞ்சிப்பதைக் குறித்தும் இந்தமத ஆபாச வேதங்கள் சாஸ்திரங்கள் புராணங்கள் முதலானவைகளின் பெயரால் பார்ப்பனர்கள் தங்கள் வயிற்றுப்பிழைப்பிற்காக வேண்டி திருட்டுத்தனமாய் எழுதிவைத்துக்கொண்டிருக்கும் அயோக்கியத்தனத்தையும், புரட்டுகளையும், பித்தலாட்டங்களையும் குறித்தும், எந்நாளும் அஞ்சாது தைரியமாய் உண்மையை வெளியாக்கி பாமரமக்களைத் தட்டி எழுப்பி, எல்லோரும் சுயமரியாதையையும், சமத்துவத்தையும், சுதந்திரத்தையும் அடையச்செய்யும் சிறந்த தமிழ்வாரப் பத்திரிகை "தமிழன்" ஒன்றேயாகும். இதற்கு வருஷ சந்தா மூன்று ரூபாய்தான். சுயமரியாதை மக்களாகிய நாம் அவசியம் ஆதரித்தேதீரவேண்டும் என்று நான் கூறுகின்றேன்.

## பார்ப்பனீயம் ஒழிந்த திதி

நான்குனேரி தாலூகா பணகுடி உயர்திருவாளர் மு. கிருஷ்ணபிள்ளை அவர்கள் சுமார் 40 வருஷகாலமாக பார்ப்பனனைக்கொண்டு நடத்திவந்த தம் ஆருயிர்த் தந்தையின் வருஷ திதியை நளதுவருஷம் புரட்டாசிமாதம் 13-தேதி வெள்ளிக்கிழமை பார்ப்பனனை ஒழித்துசுயமரியாதைக்கொள்கைப்படி பந்துக்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமளித்து முடித்தார்கள்.

அ. அழகுகவுண்டர்,

## சுயமரியாதைத் தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் ஓர் வேண்டுகோள்.

நம் நாட்டின் கண் சுயமரியாதை இயக்கம் தோன்றி சுமார் ஈராண்டுகளாக கர்ஜனையோடு நடந்து வருவது யாவரு மறிந்த விஷயம், ஒவ்வொரு நாளும் சுயமரியாதையை நாடி வருகின்றனர் பலர், ஆதரிக்கின்றனர் பலர்,சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டனர் பலர், பார்ப்பனப்புரோகிதத்தை அறவே யொழித்தனர் பலர், இந்நன் முயற்சிக்கு காரண கர்த்தர் மா பெருந் தலைவர் வைக்கம் வீரர் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களென்பதை சொல்லவும் வேண்டுமோ நம் சுயமரியாதை இயக்கம் பல்லாண்டுபல்லாண்டுகளாக நீடூழி வாழ்க! வேண்டுவதற்குரிய ஒருஸ்தாபனம் ஏற்படுத்துவதற்கு தலைவர்களாவது தொண்டர்களாவது இது காறும் சிரத்தை எடுத்துக் கொள்ளாதது பற்றி அனைவரும் சிறிது விசனிக்க வேண்டியதாயிருக்கிறது- கதருக்காக காந்தியடிகள், நிதிதிரட்டி கதர் ஸ்தாபனம் எவ்விதம் நடந்து வருகிறதோ அதேபிரகாரம்நம் சுயமரியாதை இயக்கம்தழைத்தோங்காம் செய்யவேண்டிய முதற் கடமையாவது ஓர் ஊரில் நம்மியக்கத்திற்குத் தகுந்த பெயர் கொடுத்து ஒரு சங்கம் நிர்மாணித்து அச்சங்கத்திற்கு நிதி திரட்டும் தொண்டில் ஒவ்வொரு தலைவரும், வீரரும், தொண்டரும், தலைப்பட வேண்டும். இது விஷயத்தில் காலம் கடத்தாது அதி விரைவில் நடத்த தலைவர்களும், சுயமரியாதை உள்ள அன்பர்களும்முயற்சி எடுத்துக் கொள்ளுவார்களென்று எதிர்பார்க்கிறேன் காலச்சக்கரம் மாறி மாறி சுழன்று கொண்டிருப்பதால் ஷை சுயமரியாதை ஸ்தாபனத்தை தலைவர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் காலத்திலேயே நடத்தி விட வேண்டும். கண்ணாயிரம்பிள்ளை,

## சுயமரியாதைச் சங்கஸ்தாபனம்.

ஜோ. திருக்குமரிபுரம்.

1928-ஞு செப்டம்பர்-மீ 7-உ(விபவவருஷம் ஆவணி மாதம்(23 தேதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு இந்நகர் ஊர் பொதுமடத்தில் அருப்புக்கோட்டை பாலரத்தின மெடிக்கல்ஹால்புரோப்ரைட்டர் திருவாளர் டாக்டர் கே. பாண்டியனவர்கள் தலைமையில்ஓர் பொதுக்கூட்டம் கூடியது திரளான ஜனங்கள் விஜயம்செய்திருந்தனர் தலைவர் முன்னுரைகூறியதும் திருவாளர் தி. கருப்பையாபிள்ளை அவர்கள் ஈரோடு நாயகம் உயர்திரு ஈ. வெ. ராமசாமிநாயக்கரவர்களின் உத்தம சுயமரியாதைக் கொள்கைகளை எடுத்துக் கூறினார் உடனே 27 பேர்கள் சேர்ந்து சங்கத்தின் உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

திரு மு ச கந்தசாமி தேவரவர்கள் தலைவர், திரு அ. வெ. திருவேங்கட ரெட்டியாரவர்கள் உபதலைவர், திரு. சி. கு. ராமசாமிரெட்டியாரவர்கள் காரியதரிசி திரு பா. அ. ராமசாமி ரெட்டியாரவர்கள் உபகாரியதரிசி,திருவாளர்கள் அம்பலம் சி.வெ. சுப்பாரெட்டியாரவர்கள் வா. ச. நாராயண ரெட்டியாரவர்கள் பா. வெ. சுப்பாரெட்டியாரவர்கள் வா. ரா. வாலகுருவாரெட்டியாரவர்கள் அ. சுப்பாரெட்டியாரவர்கள் போ. ரா. நாகுரெட்டியாரவர்கள் ச. முத்திருளத்தேவரவர்கள் நிர்வாககமிட்டி அங்கத்தினர்கள்.

பின்னர் தலைவர் முடிவுரை கூறியதும் காரியதரிசி யவர்களால் வந்தனோபசாரம் கூறியதும் சந்தனதாம்பூலம் வழங்கப்பெற்று கூட்டம்இனிது கலைந்தது.

## சமத்துவத் தாண்டவம்.

அழகிய நல்லூர்தி, அ.வேங்கடசாமி பாடியது

[பா. சித்தர் பாடல் மெட்டு]

மகிழ்ந்து மகிழ்ந்து மகிழ்ந்தாடுவோமே—ஏழை
மக்களுடன் கூடிமகிழ்ந்தாடுவோமே
ஆடுவோமே மகிழ்ந்தாடுவோமே—ஏழை
அன்பர்களுடன் மகிழ்ந் தாடுவோமே [1

பள்ளுப் பறை சக்கிலிய னென்னுமாந்தர்
பாரதத்தாய் பெற்றெடுத்த சுத்த சாந்தர்
தள்ளுபட்டுச் சுயராஜ்யம் வாங்கவென்றால்
சரிப்படாதென்று மகிழ்ந் தாடுவோமே [2

வெள்ளையர்கள் நம்மை வித்தி யாசத்தோடும்
மேல் நடத்துகின்றாரென்று கூச்சல்போடும்
கள்ளமுள்ள பார்ப்பாரே யுங்கள் சாதிக்
கட்டிருக்கலாகுமோ வென் றாடுவோமே [3

அன்னியர்களாளுகின்றா ரென்றுகத்தி
ஆர்ப்பரிக்கும் பார்ப்பனரே யுங்கள் புத்தி
தன்னினத்தைத் தள்ளிவைத்த தென்னயுத்தி
சற்றுமினி முடியாதென்றாடுவோமே [4

பாரதத் தாய் மக்களல்லோ நாமெல்லோரும்
பட்சபாதம் பேசலாமோ பார்ப்பார் நீரும்
ஓர் வயிற்றிற் பிறந்தோருக்குள்ளும் பேதம் [மே
உண்டோசொல்லும் மிண்டரேயென் றாடுவோ

பறவர் குறவர் பள்ளர் பறையரெல்லாம்
பார்க்கொணாதெனும்பார்ப்பார் நெஞ்சங்கல்லாம்
ஒருபோதும் கெட்ட புத்தி விட்டிடார் நாம்
ஒன்றுகூடி நின்றுமகிழ்ந் தாடுவோமே [6

மேடையில் நின்றாலுமதை நீக்குமென்பார்
வீதியிலும் நின்டார் வரக் கூடாதென்பார்
பாடையேற்றிப் பார்ப்பனியப் பேயைச் சுட்டு
பண்புடன் நாம் ஒன்று கூடி யாடுவோமே [7

தங்கள்மதத்தவர்கோயி லுள்ளே வந்தால்
சாமி செத்துப்போகுமென்றுள்ளம் நொந்தால்
உங்களுக்கிங்குசோலி யுண்டுமோகாண்
உலுத்தரே யென்றுமகிழ்ந்தாடுவோமே (8

மக்கள் தொட்டால் தீட்டு வரு மென்றால்நீங்கள்
மக்களில் லாதநாடு தேடி வாழுங்கள்
மக்கள்பேதமின்றி நாங்க ளொன்றுகூடும்
வாழ்வேசுய ராஜ்யமென்றாடுவோமே [9

சுயராஜ்யம் சுயராஜ்யமென்றுபாடி
சோதரரைத் தாழ்த்திச் சொல்லலாமோசாடி
சுயராஜ்யம் பார்ப்பனர்க்கு வந்தாலேழைச்
சோதரர் மாய்குவாரென்றாடுவோமே [10

தாழ்த்திவைத்த மக்களுடன் கூடியொன்றாய்
சமபந்திபோசனங்கள் செய்வோம்நன்றாய்
ஊத்தைமக்கள் மிரட்டலுக்குள்ளமஞ்சோம்
உடன்கூடி யேழையரோடாடுவோமே [11

குக்கலை மடிமேல்வைத்துக் கொஞ்சிடலாம்
கூறுகெட்டுப்பிச்சைவாங்கக்கெஞ்சிடலாம்
மக்களைத்தொடில்தீட்டு வந்திடுமாம்
மாயமிது மாய்ந்திட வென்றாடுவோமே [12

அன்பு மதத்தினிலே நாங்கள்சேர்வோம்
அறிவைமேன் மேல்வளர்த்து நாங்கள் வாழ்வோம்
வம்பு மதத்தினிலே நாங்கள்சேரோம்
மக்களே தெய்வங்களென் றாடுவோமே [13

சுயமரி யாதையுடன் நாமிருப்போம்
தொழில்பலசெய்துபொருள் தான்வளர்ப்போம்
சுயராஜ்யம் பிறரிடம் கேட்கமாட்டோம்
சுயராஜ்யம் இங்குளதென்றாடுவோமே [14

மக்களுக்குள்ளேபேதம் பார்க்கமாட்டோம்
மடையர்களுறவினைச் சேர்க்கமாட்டோம்
வைக்கம்வீர ஞானகுரு தான்பணித்தே
மங்களமாய் வாழ்தவோமென்றாடுவோமே [15

# புதிய பல்கலை மாடங்கள்.

("முழுத்தறி" எழுதுகிறார்.)

சென்னை மாகாணத்தில் சென்றாண்பது ஆண்டுகளாக சென்னைப் பல்கலை மாடம் கல்லூரிகளை மேல் பார்ப்பதும் பிள்ளைகளைச் சோதனை செய்வதும் பட்டங்களளிப்பதுமான வேலைகளில் அமர்ந்து அநேக புலவர்களையும் தொழில் வாணர்களையும் வெளியனுப்பியுள்ளார்களென்பது நாடறிந்த செய்தி. சென்ற சில ஆண்டுகளாக இம்மாட வுரிமை பெற்று வருபவர்கள் கல்வித்திறமையிலும் கடை முறைமையிலும் குறையுற்றவர்களென்ற எண்ணம் பரவிவருகிறது. கல்வியின் பயன் பொருளீட்டமென்றதால் நாடோறும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்லாயிரமாணவர்கள் கல்விபயின்று வருகின்றனர். அன்னோர்படிப்பு பெரும்பான்மையும் வட்டுச்சுவரைக்காரியென்று இகழப்படுகின்றது. வழக்குமன்றங்களிலும் அரசு முறைமை நிகழ்த்தும் நிலையங்களிலும் கல்வி மாடங்களிலும் பட்டதாரிகள் பலர் பல்கிவர ஊதியம் நாளடைவிற் குறைந்து வருகின்றதென்றும் அநேகருக்கு உணவு கிடைக்காமல் வருந்துகின்றனரென்றும் பற்பல விடங்களில் கூச்சலிடுகின்றனர், முயற்சி கிடையாதவர் முணுமுணுத்தலும் மனநோவடைதலும் விதியை நொந்து கொள்ளுதலும் அரசினைக் குறைகூறுதலும் இயல்பாயிருக்கின்றன. ஒரு பல்கலை மாடத்தால் விளைந்தது இதுவானால் பல பல்கலை மாடங்களால் விளையும் வறுமையைச் சாற்றவும் வேண்டுமோ? மைசூர் பல்கலை மாடம், ஆந்திரப் பல்கலை மாடம் உஸ்மானியாப்பல்கலைமாடம் இவை மூன்றும் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கானபட்டதாரிகளை வெளிப்படுத்துகின்றன. கேரளப்பல்கலைமாடமும், தமிழ்ப் பல்கலைமாடமும் கருவிலிருக்கின்றன. அண்ணாமலைப்பல்கலைமாடம்பிரசவநிலைமையிலிருக்கின்றது. பல்கலை மாடங்கள் பெருகுவதால் நாட்டையும் பயன் யாதுமிழைப்புக்கு வழியில்லாமல் பிழை செய்தற்கு வழிதேடிக் கொடுக்கின்றனவென்பர் ஒருசாரார். அறிவினையக்கற்பிடிக்குமாற்றலைப்பெருக்கி ஆயுந்திறனைசெவ்வையாக்குமென்பர் மற்றொருசாரார் இப்பயன்களைப் பெறவிரும்புவோர் ஆங்கிலக்கல்வியன்றி வேறு கல்விகளால் அவற்றை யெய்தல் கூடாதோ என்பார் வேறுசிலர்.

பல மாடங்களேற்படுத்தலில் கவனிக்கத்தக்கன சிலவுள. புதிதாகக் கண்டுபிடித்தல் புதியனவாக வுண்டு பண்ணல் இவைபோன்ற கல்வியளித்தல் நாட்டுக்கு நலம். இவையன்றி நெட்டுருப் பண்ணித் தேர்வுபட்டம்பெறுதலால் கேடுவிளையும். பள்ளிக்கூடப் படிப்பு எவருக்கும் இன்றியமையாதது; கல்லூரிப் படிப்பு நாட்டு நன்மை வளருமாறு புதியன கண்டுபிடித்தல், உண்டு பண்ணுதல் இவற்றைத் தலைமையாகக் கொள்ளுஞ் சிலருக்கே வேண்டியதாம்.

தற்காலப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலை மாடங்களிலுமுள்ள ஆசிரியர்களிற் பெரும்பான்மையோர் ஏற்பகவாற்றலுடையரேயன்றி பழையனகழித்துப் புதியன புகச்செய்யுமாற்றலுடையரல்லரென்று நாடெங்கும் ஓலமிடுகின்றது. ஒரு வகை மக்கள் மேற்கூறிய நிலையங்களில் ஓதி வருவதால் ஏனை மக்களின் கல்வி வளருவதற்கிடமில்லையென்று முறையிடுவதை நாள், வாரத்தாள்களிற் படித்து வருகின்றோம், எவ்வகை மக்களாயினுமாகுக. விரிவுடை அறிவினர்கள் ஆசிரியர்களாயிருப்பின் பல்வகை மக்களும் பயன்பெறுவரென்பது திண்ணம். ஒருவகை மக்கள் நிரம்பியுள்ள கல்வி நிலையங்களில் நடுவு நிலைமைகோணி ஓரம்செய்து வருதலை நாடோறுங் கேட்கிறோம். கோணிக்குறுகிய மனத்தினர் பல்கலை மாடங்களிற் பல்குவதால் 'இனமினத்தோடே, வெள்ளாடு தன்னோடே' என்ற முதுமொழி உண்மை மொழியாக விளங்குகின்றது. கல்வி நிலையங்களனைத்திலும் வகுப்புவாரி ஆசிரியர்களேற்படும் வரை மாடங்கட்பெருக்கால் நாடுநலமுடையாதென்பது திண்ணம். நகரத்தார் வண்மையாலேற்படும் நிலையங்களில் இக்குறையை நீக்கினல்லன்று. நேற்றுப்பள்ளி, இன்றுகல்லூரி, நாளை பல்கலைமாடமென்று ஓங்கிவளருதல் உண்மையான வளர்ச்சியன்று. பொருண்மாட்சியால் எதுவுங்கைகூடுமன்றோ? கட்டிடங்களுங்கூட உறுதிப்படவேண்டுமாயின் இடையிடையே விட்டுவிட்டுக்கட்டுதல் நலமென்பர், அஃதன்றி மாயை மந்திரத்தால் வளரும் பூண்டுகள் விரைவிற்றோன்றி மறைகின்றனவென்பதைச் செப்படிவித்தை செய்வோர் எடுத்துக்காட்டுகின்றனர்.

பெரிய கல்வி மாடங்கள் கட்டுவதும் மாணவர்பெருகி உண்டுகளிக்க நிலையங்களையமைப்பதும்போதாது. பல்வகைமக்களுக்கும்பயன் பெறுமாறு சட்டதிட்டங்களை ஏற்படுத்தி அவைவழக்கத்தில் நடைபெறச்செய்தலே பிறர்நலங்கருதிச்செய்யும் அறச்செயலாகும் அஃதன்றி புகழ்மாலை கட்டிப்போற்றும்பாம்பரைக்குமட்டுமேபலவசதிகளை அமைப்போர் தம்பெருமை நாடுந்தகையிலரெனப்படுவார்.

கோடிக்கணக்கான தமிழ்மக்களுக்குப்பல வாற்றிலும் வசதியின்றி பன்னூருபிரம் பவுன்களையழித்தல் வள்ளன்மையன்று. தாயும் தமரும் பசித்துலரப்பேயும் பிணமுமுண்டாடச் செய்தல் ஆயுமனத்தர் செயலாமோ?

தொன்மையாகவந்த செட்டிப்பெயரையாற்றி-தனவணிகரென்ற ஒலிநிறைந்தபெயர் சூடிவரும்தமிழ்மக்கள் காலந்தாழ்க்காமல் எண்ணிப்பார்த்து 'பிறர்க்கீவோர் தமக்கீவர்' என்றவுண்மையினை நினைந்து தமிழ்மக்களுய்யுமாறு புறவறத்தினும் மேம்பாடான கல்வியாகிய அகவறத்தினை அன்னருக்குச்செய்தலைக்கைப்பிடிப்பாராக.

வைக்கம் வீரர் உயர் திருவாளர்

**ஈ. வெ. ராமசாமி நாயக்கர்**

திருவுருவப்படம் மார்பிள் பிரிண்டாக செய்யப்பட்டு கண்ணாடி போடும்படி 10x8 இஞ்சு உள்ளது. ஒவ்வொரு சுயமரியாதை நண்பர்கள் வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. 100-கப்பிகள் ரூ 5-0-0. டசன் 1-க்கு அணா 11. இரண்டணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு ஒரு கப்பி அனுப்பப்படும்.

கே பாலய்ய செட்டியார்,

ஷாப், நாகூர்.

# கவனிப்பார்களா?

மக்களின் விடுதலைக்கும் சீர்திருத்தத்திற்கும் சுயமரியாதைக்கும் தடைகல்லாயிருப்பது குருட்டு நம்பிக்கையும் மூடப் பழக்கவழக்கங்களும் பொல்லாப் புரோகிதமுமெனக்கண்டு ஆப்கன் அமீர் தமது நாட்டில் இத்தீயவைகளை ஒழித்து சீர்திருத்தம் செய்ய முற்பட்டிருக்கின்றார். தாமும் தம்மனைவியாரும் சின்னாட்கள் ஐரோப்பாவிலுள்ள முக்கியமான தேசங்களையெல்லாம் பார்த்து வந்த பிறகு தம்பதிகளிருவரும் தங்கள் நாட்டார் மீது மிகுந்த பட்சங்கொண்டு மக்களை முன்னிலும் மேம்பாடுடையவர்களாய்ச் செய்வதற்கு ஆசைகொண்டு பெண்மக்கள் கட்டாயம் படிக்கவேண்டுமென்றும், இதர நாடுகளுக்குப் பெண்களும் போய் படிக்கலாமென்றும், பெண்கள் முக்மூடியை எடுத்து விட வேண்டுமென்றும் அவற்றிற்கான நடபடிகள் எடுத்துக்கொண்டு, பல வைதீகத் தன்மைகளை மாற்றவேண்டுமென்று மாற்றியும் விட்டார்கள். நம் நாட்டில் பால்யவிவாகத் தடுப்பு, விபசாரத்தடுப்புகளெல்லாம் மதத்துக்கு விரோதமென்று நமது மதாச்சாரிகள் கத்துவதுபோல், காபூலிலும் அமீர் செய்யும் திருத்தங்கள் மதத்துக்கு மாறானதென்று வைதீகவஞ்சப்பார் குழப்பஞ்செய்கிறார்களாம். நமது சுயமரியாதை வீரர்களை நாஸ்திகரென்றும், நாஸ்திகத்தில் அமிழ்ந்துவிட்டார்களென்றும் தூற்றுகின்ற கபடர்களைப்போல் அமீரையும் ஆங்கு தூற்ற ஆரம்பித்திருக்கின்றார்களாம். அமீருக்கு எதிரிடையாக துவேஷப் பிரசாரங்களும் செய்யப்படுகின்றனவாம். ஆனால் ஆண்மையுள்ள அமீர் இவ் வைதீகர்களுடைய கூக்குரலுக்குச் சிறிதும் அஞ்சாமல் குறும்பர்கள் செய்கையை முளையிலேயே கிள்ளிவிட வேண்டுமென்று மக்கள் சீர்திருத்தத்துக்கும் சுயமரியாதை இயக்கத்துக்கும் யார் யார் எதிரிடையாக இருக்கின்றார்களோ அவர்களையெல்லாம் பிடித்துச் சிறைச்சாலையில் அடைத்துவைக்கும்படி செய்திருக்கின்றாராம். வேதத்தின் பெயராலும் மதத்தின் பெயராலும் மூடப்பழக்கவழக்கங்களின் பெயராலும் மக்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பதை அகற்ற வேண்டியது அரசரின் கடமையென்பதை உணர்ந்த அமீரின் முயற்சிக்கும் சுயமரியாதைக்கும் விரோதிகளாகிய புரோகிதர்களையும் அவர்களுடைய சொற்புத்தி கேட்டு துவேஷப் பிரசாரம் செய்பவர்களையும் அமீர் சிறையிலடைப்பது மக்கள் விடுதலைக்கொத்தவையேயாம். நமது அரசாங்கத்தாரும், நமது தேச சீர்திருத்தக்காரர்களும் இந்தியாவின் தலைமேலிருக்கிற காபூல் அமீர் செய்துவரும் சீர்திருத்தங்களையும் அவருடைய ஆண்மைத்தனத்தையும் கவனிப்பார்களா? வைதீகக்கொடுமைக்கு உலகமெங்கும் சாவுமணி யடித்துவருகிறதென்பதை கமால்பாட்சா, அமீர் இவர்களின் ஆண்டகைமையிலிருந்தாவது அறிந்துகொள்க. சுயமரியாதை விரோதிகள் சுபூதமாவார்களா?

"நாடார் குல மித்திரன்."

## சுயமரியாதைப் பிரசாரம்

### சூரம்பட்டி.

சென்ற மாதம் 29-ம் தேதி சனிக்கிழமை இரவு ஈரோடு தாலூகா சூரம்பட்டியில் சுயமரியாதைச்சங்கசார்பாக திரு எஸ். இராமநாதன் தலைமையில் ஒருமகாநாடு கூட்டப்பட்டது. அம்மகாநாட்டிற்குபெண்கள் ஆண்கள் உள்பட சுமார் ஆயிரம் பேருக்கு மேலாகவே வந்திருந்தார்கள். ஈரோட்டிலிருந்தும் சுமார் 30 கனவான்கள் வரையில்வந்திருந்தார்கள். தாழ்த்தப்பட்டவர்களிலும் அநேகம்பேர் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. கூட்ட ஆரம்பத்தில் சூரம்பட்டி சுயமரியாதைச் சங்கச்சார்பில் திரு ராமநாதன் அவர்களுக்கும் திரு நாயக்கருக்கும் அகவற்பாவில் இரண்டு உபசாரப்பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. பிறகு திரு நாயக்கர் சுமார் 2-மணி நேரம் தீண்டாமை ஒழியவேண்டும் என்பதுபற்றியும அர்த்தமற்ற சடங்குகளைப்பற்றியும் மூடபக்தியை பற்றியும் கிராமத்து ஜனங்களுக்கு எடுத்துச்சொன்னார். அக்கிராசனரும் நாயக்கரை ஆதரித்துப்பேசினார். இரவு 11மணிக்கு சங்ககாரியதரிசி திரு ராஜு நாயக்கரால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு சங்கத்தலைவர் திரு கவுண்டர் அவர்களுக்கும் நாயக்கருக்கும் ராமநாதனுக்கும் மாலைகள் சூட்டப்பட்டு மகாநாடு இனிது நிறைவேறியது.

### கோபிசெட்டி பாளையம்.

30-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை ஈரோட்டிலிருந்து திருவாளர்கள் ஜே. எஸ். கண்ணப்பர், எஸ். ராமநாதன், ஈ. வெ. ராமசாமி நாயக்கர், ஈஸ்வரர், எல்லநாயக்கர் முதலியவர்கள் கோபிக்கு மாலை 4-மணிக்கு வந்துசேர்ந்தார்கள். கோபி யூனியன்சேர்மென் திருவாளர் முருகப்ப கவுண்டர் அவர்கள் ஜாகையில் வரவேற்று சிற்றுண்டி அளிக்கப்பட்டபிறகு மாலை 5 மணிக்கு வெள்ளாளசமபந்தி போஜனஹாஸ்டலின் முன்பாக கோபி சேர்மென் திரு முருகையகவுண்டர் அவர்கள் அக்கிராசனத்தில் பெரியகூட்டம் கூட்டப்பட்டது. அதற்கு சுற்றுப்பக்கம் கிராமங்களிலிருந்து பெரியபெரிய மிராஸ்தார்கள் உள்பட சுமார் 1500 கனவான்கள்வந்திருந்தார்கள் கூட்டம்ஆரம்பமானதும் அக்கிராசனர்முகவுரைக்குப்பின்கோபி மாஜனங்களின் சார்பாக திரு நாயக்கருக்கு ஒருநீண்ட உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது

பிறகு புளியம்பட்டி திரு கிஞ்சப்பகவுண்டர் அனியாயமரணம் அடைந்ததுபற்றி ஒரு அனுதாபத்தீர்மானம் திரு நாயக்கரால் பிரேரேபிக்கப்பட்டு கோபி தாலூகா போர்டுவைஸ்பிரசிடெண்ட் திரு- சி- கே- சுப்பிரமணியகவுண்டர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டுகூட்டத்தில்உள்ளவர்கள் எல்லோரும் எழுந்துநின்று நிறைவேற்றப்பட்டது.

பிறகு திரு எஸ்-ராமநாதன் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தின்தத்துவத்தை எடுத்துச்சொல்லி அடிமைப்பட்ட நாட்டிற்கும் அறிவின் பிரகாசம் பெறுதற்கும் சுயமரியாதையியக்கந் தக்கவந்தான் விடுதலையளிக்க வல்லதென்றும் திரு நாயக்கர் பல வழிகளிலும் மக்களை விடுவிக்க முயற்சித்துப்பார்த்த பிறகுதான் இந்த இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறார் என்றும்,மற்ற அடிமைப்பட்ட நாடுகளும் சுயமரியாதையியக்கக்கொள்கையில் தான் விடுதலை பெற்றனவென்றும், அநேக மேற்கோள்களுடன் விவரித்துச்சொன்னார்-

பிறகு, திருவாளர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் நாட்டின் விடுதலைக் கென்று ஆயிரக்கணக்கான வருஷங்களிலிருந்து இதுவரையேற்பட்ட இயக்கங்களைப் பற்றியும் அவை பலனளிக்காமல்போனகாரணங்களைப்பற்றியும் அவைகளினால்மக்களுக்குஏற்பட்டகெடுதிகளையும் கஷ்டநஷ்டங்களையும்விரிவாய்எடுத்துச்சொல்லி பார்ப்பனர்களாலும்படித்தகூட்டத்தார்களாலும்பணக்காரர்களாலும்நாட்டுக்கும் ஏழை மக்களுக்கும் ஏற்பட்டுவரும் கொடுமைகளைப்பற்றியும் இம்மூன்று கூட்டத்தாரின் சுயநலத்தினால் அரசாங்கத்தார் மக்களை கொடுமைப்படுத்த நேரிட்டதைப்பற்றியும் சொல்லிவிட்டு மூடப்பழக்க வழக்கங்களைப்பற்றியும் மூன்றுமணிநேரம் பேசினார். பிறகு திரு ஜே. எஸ்- கண்ணப்பர் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைப் பற்றியும்அது ஏற்பட்டதுமுதல் நமது நாட்டிற்கு இதுவரை செய்திருக்கின்ற நன்மைகளைப்பற்றியும் விஸ்தாரமாய் சொன்னதுடன் பார்ப்பனரல்லாதார் எல்லோரும் படிக்கவேண்டும் என்றும் அரசாங்க உத்தியோகங்களை எல்லாம் கைப்பற்றவேண்டும் என்றும் நாடுவிடுதலை பெறுதற்கும் பார்பனரல்லாதார் சுயமரியாதை பெறமுடியாமலிருப்பதற்கும் அதிகாரங்கள் எல்லாம் பார்ப்பனமயமாய் இருப்பதே காரணம்என்றும்சொல்லியதோடு அதற்கு உதாரணமாக அநேக பார்ப்பன அதிகாரிகள் செய்யும் அக்கிரமங்களையும் அனுபவ பூர்வமாக எடுத்துக்காட்டினர்.

பிறகு அக்கிராசனர் திரு முருகைய கவுண்டர் உபந்யாசகர்களை ஆதரித்துப் பேசியபின் வந்தனோபசாரம் கூறப்பட்டு தலைவர் உபந்யாசகர்கள் முதலியவர்களுக்கு மாலையிடப்பட்டு மகாநாடு 10-மணிக்கு இனிது முடிவு பெற்றது. அன்றுஇரவு சேர்மென் திரு முருகய்யகவுண்டர் வீட்டில் ஒரு பெரிய விருந்துநடந்தது பிறகு இரவு 11-மணிக்குமோட்டார்மூலம் ஈரோடுசென்றார்கள்.

### ஈரோடு.

இம்மாதம் 1-ம்தேதி திங்கட்கிழமைமாலை ஈரோடு காங்கிரசவுக்கில் பென்ஷன்தாசில்தாரும் தென் இந்திய நல வுரிமைச்சங்கதலைவருமான, திரு ஈ.என். வெங்கிட்டபெருமாள் நாயுடு அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது.


சென்னையிலிருந்து வந்திருந்த பென்ஷன் ஜில்லா ஜட்ஜு திவான் பகதூர் டி. வரதராஜுலு நாயுடு அவர்கள் முதலில் பேசுகையில் பார்ப்பனரல்லாதார் இயக்க சம்பந்தமாக ஆங்காங்கு கிளை ஸ்தாபனங்கள் ஏற்படவேண்டுமென்றும் அதற்காகவே தாம் ஆங்காங்கு சுற்றுப்பிரயாணம் செய்து வருவதாகவும் சொன்னதோடு அதன் கொள்கைகளை எடுத்துச் சொல்லிபார்ப்பனரல்லாதார் எல்லோரும் சங்கத்தில் மெம்பர்களாகவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்

(இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)



சுயமரியாதை, தீண்டாமைவிலக்கு, கதர் அபிவிருத்தி முதலியவைகளுக்காக உழைத்துவந்தவரும், கல்விக்காக 50000 ரூபாய் உதவியவருமான, காலஞ்சென்ற உயர் திரு. கிஞ்சப்பகவுண்டர்.

ரோஜா முத்தையா



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ-ஹு புரட்டாசி மீ 22-உ

# சைவ சமயம்.

சமயம் என்பதைப்பற்றி சென்றவாரம் ஒரு தலையங்கம் எழுதியிருந்தோம். இவ்வாரம் சைவசமயம் என்பதுபற்றி எழுதுகின்றோம்.

கொஞ்ச காலமாக சைவ சமயத்தின் பேரால் சிலர் போடும் கூச்சல் அளவுக்கு மேல் போகின்றது. சுயமரியாதை இயக்கத்தை ஒழித்தாக வேண்டும் என்று கட்சி சேர்க்கின்றார்களாம். அரசியல் பிழைப்புக்காரர்கள் சிலர் அப்படித்தான், அதாவது 'சுயமரியாதை இயக்கத்தை ஒழித்தாக வேண்டும், அதை ஒழிக்காவிட்டால் சுயராஜ்யம் தடைபட்டுப் போகும்' என்று கூச்சல் போட்டார்கள். கூலி கொடுத்தும் கூச்சல் போடச்சொன்னார்கள். அவ்வளவு கூச்சல்களையும் அடக்கிக்கொண்டு இப்போது நமதியக்கம் தலை நிமிர்ந்து நிற்கின்றதையும் அரசியல்காரர்களில் பெரும்பாலோரும் இதை ஆதரிப்பதையும் பார்த்து ஒருவாறு அடங்கி விட்டார்கள். இப்போது சைவ சமயத்தார்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்களில் சிலர் கிளம்பி சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்கவேண்டும் என்று பிரசாரம் செய்து வருகின்றார்கள். இச்சைவசமயத்தார்கள் என்பவர்கள், சுயமரியாதை இயக்கம் பார்ப்பனீயத்தையும், பார்ப்பனர்களையும் கண்டிக்கும் பொழுதும் வைணவ சமயத்தையும் வைணவர்களையும் கண்டிக்கும் பொழுதும் ஆனந்தக்கூத்தாடிக் கொண்டு நம்மீதும் சுயமரியாதை இயக்கத்தின்மீதும் புகழ்புராணமும் கவியும் பாடிக் கொண்டிருந்தார்கள்.

அதாவது, பார்ப்பன ஆதிக்கத்தை கண்டித்து சங்கராச்சாரியாரைத் தாக்கி வரும்போது நமக்கு உதவியும் செய்தார்கள். பிறகு வைணவபுராணங்களின் வண்டவாளங்களை வெளியாக்கும்போதும் நமக்கு உதவி செய்து வந்தார்கள். இதுமாத்திரமல்லாமல், இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லையென்றும் இந்து மதம் என்று சொல்லப்படுவது பார்ப்பனுடைய கொள்கைகள், கொண்டது என்றும் சொல்லும் போதும் அதை ஆதரித்து அதற்கும்வேண்டிய ஆதாரங்கள் உதவி வந்தார்கள்.

கடைசியாக, சைவமதப் புராணங்கள் என்பவைகளின் முறையில் அவற்றின் யோக்கியதைகளை வெளியாக்க நேரிட்டபோது மாத்திரம் 'சுயமரியாதை இயக்கம் சமயங்களுக்கு ஆபத்தை விளைவிக்கின்றது; மோக்ஷத்திற்குத் தடையாய் நிற்கின்றது' என்று சொல்ல வந்து விட்டார்கள். எனவே சைவ மதம் என்றால் என்ன? அது பார்ப்பன மதமல்லாமல் வேறு தனி மதம் என்றோ அல்லது தமிழ் மக்கள் மதம் என்றோ யாராவது சொல்ல முடியுமா? என்பதை முதலில் கவனிக்க விரும்புகின்றோம்.

நம் நாட்டு சைவர்கள் பெரும்பாலும் நாங்கள் 'பார்ப்பன மதத்தை வெறுக்கின்றோம்' என்கின்றார்கள். அன்றியும் பார்ப்பனர்களது மதஆதாரம் என்பவைகளாகிய நான்குவேதங்கள் என்பதையும் சைவர்கள் தங்களுக்கு சம்மந்தப்பட்டதல்ல என்கின்றார்கள். பார்ப்பனர்களின் "மோக்ஷ" சாதனமான வேள்விச்சடங்குகளையும் தாங்கள் ஒப்புக்கொள்ளுகின்றதில்லை என்கின்றார்கள். மற்றும் புராணங்கள் என்பவைகளையும் ஆரிய சாஸ்திரங்கள் என்பவைகளையும் தாங்கள் ஒப்புக்கொள்ள முடியாதென்பதுடன் அவைகள் பொய்என்றும் கற்பனை என்றும் சொல்ல முன்வந்திருக்கின்றார்கள். பார்ப்பன ஆச்சாரியார்களும் அதாவது சங்கராச்சாரி போன்றார்களும் தங்களுக்கு சம்மந்தப்பட்டவர்கள் அல்ல என்றும் சொல்லுகின்றார்கள்.

மற்றும் இவ்வளவோடு, அதாவது "ஆரியன் கண்டாய்! தமிழன் கண்டாய்!" என்று ஆரியத்தையும் தமிழையும் பிரித்து ஆரியத்திற்கும், தங்களுக்கும் தங்கள் சைவ மதத்திற்கும் சிறிதும் சம்மந்தமில்லை என்றும் தாங்கள் தனித் தமிழ்ச் சமயத்தார் என்றும் சொல்லிக்கொள்ளுவதுடன் அதற்கு வேண்டிய ஆதாரங்களையும் கண்டு வைத்திருக்கின்றார்கள். உதாரணமாக 'தென்னாட்டுச் சிவனேபோற்றி' என்றும் பிரித்துச் சொல்லுகின்றார்கள். எனவே இந்நிலையில், சைவ மதம் என்றால் என்ன?

முதலாவதாக, கற்பனை என்றும் பொய் என்றும் ஆபாசமென்றும், அசம்பாவிதம் என்றும் சொல்லும்படியான கந்தபுராணம் சிவமகாபுராணம் முதலாகிய புராணங்களை ஒதுக்கி விட்டுப்பார்த்தால் சிவனுக்கோ சைவத்திற்கோ ஏதாவது கடுகளவு இடம் இருக்கின்றதா என்பதை கூர்ந்து நோக்கும்படி வாசகர்களை கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இரண்டாவதாக, இந்து மதத்தையோ, வைணவ மதத்தையோ, சைவ மதத்தையோ, தனித்தனியாகவோ பொதுவாகவோ எடுத்துக்கொண்டு பார்ப்போமேயானால் அவைகளிலுள்ள பொதுவான கடவுள்களும், வைணவ, சைவ கடவுள்களும், சூரர்கள் என்னும் "தேவர்க"ளின் வேள்வி என்னும் யாகத்தை அழித்துவந்த அசுரர்கள் என்னும் "அரக்கர்களை" கொன்றுவென்று யாகத்தைக்காக்க வந்தது என்கின்ற அஸ்திவாரம் தவிர வேறு மார்க்கத்தில் வந்த கடவுள்கள் ஏதாவது எங்காவது இருக்கின்றனவா? என்றுபார்க்கும்படி வேண்டுகின்றோம்.

அல்லது, பார்ப்பனர்கள் என்னும் ஆரியர்களின் வேதத்தை ஒப்புக்கொள்ளாததினாலோ நிந்தித்ததினாலோ, உலகம் "நீதியும் ஒழுக்கமும் கெட்டுப்போய் விட்டது" என்றுசொல்லிக்கொண்டு அவதாரம் செய்ததாகவோ தோன்றியதாகவோ அல்லாமல் வேறு வழியில் வந்த ஏதாவது கடவுள்களுண்டா? இருக்கின்றனவா?

இந்து, வைணவ, சைவ சமயசம்மந்தமான எந்த புராணமும் இதைத்தவிர வேறு என்ன காரணங்களாவது கற்பிக்கின்றனவா?

உதாரணமாக, சைவ சமயாச்சாரியார்கள் என்பவர்களும் "வேத வேள்வியை மக்கள் நிந்தனை செய்ததால் தோன்றவேண்டியவர்களானார்கள். வேதவேள்வியைநிந்தனைசெய்த மக்களையும் அழித்து வேதவேள்விச்சமயத்தையும் கடவுள்களையும் ஆதரிக்கவேண்டியவர்களானார்கள்" என்பதையாராவது மறுக்க முடியுமா என்று கேட்கின்றோம்.

மற்றும்வேதத்தையும்வேள்வியையும் தள்ளிவிட்டு அவற்றைக் காப்பாற்றவந்த கடவுள்களையும் தள்ளிவிட்டு ஆரியர்களால் புனையப் பட்டது என்கின்ற புராணங்களையும் தள்ளிவிட்டால், தேவாரத்திற்கோ, திருவாசகத்திற்கோ மற்றும் "தமிழ் மறை"க்கோ எங்காவது இடமிருக்கிறதா என்று கேட்கிறோம்.

சிவம், சைவம், ஆகமம், தேவாரம், திருவாசகம் என்ற வார்த்தைகளும் ஆரியத்தை அடிப்படையாகக்கொண்டவைஎன்னும்வழக்கை சுலபத்தில் தள்ளிவிட முடியாது. மற்றும் சைவக்கடவுள்கள் பெயரும் அக்கடவுள்களின் பெண்ஜாதி பிள்ளைகளின் பெயரும் அனேகமாய் முழுதும் ஆரியபாஷைப் பெயர்களே தவிர வேறில்லை. மற்றும் அப்பெயர்களுக்கு ஏற்ற காரணங்களும் அக்காரணங்களுக்கு ஆரியர்களால் கற்பிக்கப்பட்ட கதைகள்தான் ஆதாரமே ஒழியவேறில்லை.மற்றும் அப்பெயர்களுக்கும்கதைகளுக்கும் ஏற்படுத்தப்பட்டபுராணங்கள் என்பவைகளும் பெரிதும் ஆரிய மூலத்திலிருந்துமொழி பெயர்த்ததாகச் சொல்லப்படுபவைகளே யல்லாமல் வேறல்ல.

சிறக, சைவ சமயம் தென்னாட்டில் பரவி இருக்கின்ற அளவு மற்ற நாட்டில் அதாவது வடநாட்டில் பரவி இருப்பதாகச் சொல்ல முடியுமா? வடநாடுமுழுவதும் ஏறக்குறையவைணவ மதம் என்றே சொல்லவேண்டும்.

தென்னாட்டில் மாமிசம் சாப்பிடாதவனுக்கு எப்படி சைவன் என்று சொல்லப்படுகின்றதோ அதுபோல் வடநாட்டில் மாம்சம் புசிக்காதவனுக்கு வைஷ்ணவன் என்று சொல்லுவதுண்டு.

தென்னாட்டிலும் சமயத்தை ஏற்றுக் கொண்டவர்கள் சிலர் என்றுதான் சொல்ல வேண்டும். அதிலும் சைவ சமயத்தார்களோ சைவ சமயம் இன்னது என்று அறிந்தவர்களோ வெகு சிலர் என்றுதான் சொல்லவேண்டும், பாக்கி உள்ள மக்கள் அதாவது 100-க்கு 90-பேர்கள் மாரி, கருப்பன், மாடன், மதுரைவீரன், பேச்சிஎன்பதுபோன்ற கடவுள் வணக்கக்காரரும் மற்றும் ஒரு சிலர் சைவ வைணவக்கடவுள்களையும் இக்க

# உலகமெங்கும் சுயமரியாதை இயக்கம்.

சுயமரியாதை இயக்கம் நம் தமிழ்நாட்டில் மாத்திரம் இருப்பதாக சிலர் கருதிக்கொண்டு இருக்கின்றார்கள். இதைதப்பான எண்ணம் என்றே சொல்லுவோம். உலகத்தில் இது சமயம் எங்கு பார்த்தாலும் உண்மை உழைப்பாளிகளும் வீரர்களும் இந்தக்காரியத்தைத்தான் செய்துவருகின்றார்கள். இந்த இயக்கத்தினுல் தான் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நாட்டை விடுதலை அடையச்செய்தும் வருகின்றார்கள். ஆனால் இது கஷ்டப் படவும் நஷ்டப் படவும் துணிந்தவர்களாலும், உண்மை வீரம் உடையவர்களாலும் மாத்திரம் ஆரம்பிக்கக் கூடிய காரியமானதால் சுயநலத்திற்காக பொதுநல சேவையில் ஈடு பட்டிருப்பதாக வேஷம் போடுகின்றவர்கள் இக்காரியத்தைச் செய்ய முடியாததுடன் வேறொருவர் செய்வதையும் அவர்களால் சகித்துக் கொண்டிருக்க முடியாது. ஏனெனில் மக்களுக்கு உண்மையான காரியத்தில் கவலை ஏற்பட்டு அதில் கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டால் போலிகளுக்கு இடமில்லாமல் போவதுடன் அவர்களது வாழ்க்கைக்கே ஆபத்தாய் முடிந்து விடும். ஆதலால் அப்படிப்பட்டவர்கள் சுயமரியாதை இயக்கத்தைத் தாக்க வேண்டியவர்களாகி விடுகின்றார்கள். எனவே எவ்வளவுதான் சுயநலமிகளால் இவ்வியக்கம் தாக்கப்பட்டாலும், ஒழிக்க எவ்வளவுதான் சூழ்ச்சி முறைகளைக் கையாளப்பட்டாலும் அம்முயற்சிகள் சூரியனை கைகொண்டு மறைத்து உலகத்திற்கு வெளிச்சம் இல்லாமல் செய்து விடலாம் என்கின்ற முட்டாள்தனமான முயற்சிக்கு சமானமாக முடியுமே அல்லாமல் வேறல்ல.

சுயமரியாதை இயக்கம் இப்போது ஒவ்வொரு நாட்டிலும் வீறுகொண்டு எழுந்து தாண்டவமாடுகின்றது. பம்பாய் மாகாணத்தில் கொஞ்சகாலமாக பெருந்த கிளர்ச்சிகள் நடந்து வருகின்றன. அதாவது சென்ற இரண்டு வருஷத்திற்கு முன்பே அங்கு புரோகிதக் கொடுமையை ஒழிக்க சட்ட சபைக்கு பல தீர்மானங்கள் வந்தன. ஜாதித்திமிரை ஒழிக்க பூனாவில் பெருத்த கிளர்ச்சிகள் நடந்து பல கேசுகளும் ஏற்பட்டு பல பெரியார்களும் சிறை சென்றனர். பம்பாயில் சென்ற வருஷத்தில் பாதிரிகளையும் முல்லாக்களையும் குருமார்களையும் ஒழிக்க வேண்டும் என்று வாலிப மகாநாடுகளில் பேசினார்கள். மற்றும் ஜாதித்திமிர் கொண்டவர்களுக்கு வண்ணார் நாவிதர் என்பவர்கள் தங்கள் தொழிலைச் செய்வதில்லை என்று தீர்மானித்துக் கொண்டார்கள். பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் எல்லோரும் அதாவது எல்லா வகுப்புக்காரர்களும் ஒரே பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துக் கொள்ள உரிமை இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்கள்.—

மத்திய மாகாணத்தில் கோவிலுக்குள் இந்துக்கள் என்பவர்களில் உள்ள எல்லா வகுப்பாரும் போகலாம் என்று தீர்மானித்து அந்தப்படியே சில இடங்களில் நடந்து வருகின்றார்கள்.

கல்கத்தாவில் மகமதிய மாணவர்கள் தாடி வளர்ப்பதை மத சம்மந்தத்தில் இருந்து பிரித்து விடவேண்டுமென்று பலாத்கார சண்டை போட்டுக் கொண்டார்கள்.

சமீபகாலத்தில் பஞ்சாப் மாகாணத்தில் சீக்கியர்கள் தங்களுடைய மத ஆரம்பகால முதல் வெகு முக்கியமானதாக கருதி வந்த காரியங்களில் ஒன்றாகிய க்ஷவரம் செய்து கொள்ளக்கூடாது தலைமயிரைக் கத்தரிக்கக் கூடாது என்கின்ற கொள்கையை அடியோடு மாற்றி தலைமயிர் வெட்டிக்கொள்ள வேண்டும் என்று கிளர்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

கடைசியாக கல்கத்தாவில் நம் நாட்டு சுயமரியாதை இயக்கத்தைப்போலவே-அல்ல இதைவிட அதிவேகமானது என்று கூட சொல்லும்படியான-ஒரு பெரிய இயக்கத்தை ஆரம்பித்து விட்டார்கள். அதன் கொள்கைகள் நமது சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளைவிட வேகமுள்ளதாய் காணப்படுகின்றன. அதாவது.

ஜாதி வித்தியாசத்தை ஒழிப்பது,

மூட பழக்க வழக்கங்களை ஒழிப்பது,

குருமார்கள், ஆச்சாரியர்கள், புரோகிதர்கள் முதலியவர்களின் ஆதிக்கங்களை ஒழித்து பகுத்தறிவை விளக்குவது,

பெண்கள் அடிமையை ஒழித்தும் ஜாதிக் கட்டுப்பாட்டை ஒழித்தும் கலப்பு விவாகம் முதலியவைகளை ஆதரிப்பது,

முதலாளிகளின் ஆதிக்கத்தை ஒழித்து தொழிலாளர்களுக்கு உரிமை அளிப்பது,

மிராசுதாரர்களின் ஆதிக்கத்தை ஒழித்து விவசாயிகளுக்கு உரிமை அளிப்பது,

பொது வாழ்வில் ஏழை பணக்காரன் என்கின்ற பாகுபாட்டையும் உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்கின்ற வித்தியாசத்தையும் ஒழித்து யாவருக்கும் சமத்துவத்தை அளிப்பது,

இவ்வளவும் போதாமல் நாட்டின் சொத்துக்களை எல்லோருக்கும் சரி சமமாய்ப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும் என்னும் கொள்கையையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

அதோடு மாத்திரமல்லாமல் அதன் தலைவர் திரு சுபாஷ் சந்திர போஷ் என்பவர் இவற்றை நிறைவேற்ற அரசியல் சங்கங்களில் இருந்து பிரிந்து தனியாய் நின்று முயற்சி செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டதுடன் இவைகள்தான் உண்மையான விடுதலைக்கு மார்க்கம் என்று சொல்லி இவ்வியக்கத்திற்கு உண்மையான பூரண விடுதலை இயக்கம் என்று பெயரும் கொடுத்திருக்கின்றார்.

வெகு சீக்கிரத்தில் இதன் பிரசாரம் ஆரம்பிக்கப்படுமாம். இதைப் பார்த்தவர்கள் நமது சுயமரியாதை இயக்கத்தை மிதவாத இயக்கம் என்று தான் சொல்லுவார்கள். இப்படி இருந்தாலும் சுயமரியாதை இயக்கத்தை மிகமோசமான இயக்கம் என்றும் மிக வேகமான இயக்கம் என்றும் சொல்லுவதுடன் நம் மீது பழி சுமத்துகின்றவர்களுக்கும் குறைவில்லை.

மத விஷயங்களில் கல்கத்தா இயக்கத்தை விட வேகமாக ஆப்கானிஸ்தானமும் துருக்கியும் போய்க்கொண்டிருப்பது எல்லோரும் அறிந்ததேயாகும்.

அதாவது ஆப்கன் அமீர் அவர்கள் தமசீர்திருத்த கட்டளைக்கு விரோதமாய் பேசுகின்றவர்களையெல்லாம் மாஜிஸ்டிரேட் உள்பட மௌல்விகள் உள்பட சிறையில் எல்லோரையும் அடைக்கின்றார்.

துருக்கியோ, அரசாங்கத்திற்கும் மதத்திற்கும் சம்பந்தமில்லை என்று விளம்பரப்படுத்திவிட்டது.

ருஷியாவோ வைதீக கொள்கைகளை உடையவர்களையெல்லாம் கைது செய்து வருகின்றது. அதாவது சமீபத்தில் அங்கு சூரியனையும் சந்திரனையும் தெய்வமாக வணங்குபவர்களையெல்லாம் போலீசார் கைது செய்து வருகின்றார்கள்.

இதே ருஷியாவில் கொஞ்ச காலத்திற்கு முன்பு பள்ளிக்கூடங்களில் மதத்தைப்பற்றியும், கடவுளைப் பற்றியும், பிள்ளைகளுக்குக் கற்பிக்கக் கூடாது என்று உபாத்தியாயர்களுக்கு உத்திரவு போட்டது எல்லோருக்கும் ஞாபகம் இருக்கலாம்.

அது மாத்திரமல்லாமல் அங்குள்ள கோவில்களை இடித்ததும் ஞாபகமிருக்கலாம்.

நமது நாட்டைச்சுற்றியுள்ள இடங்களில் இவ்வளவு காரியங்கள் நடக்கின்றபோது நமது நாட்டில் இன்னமும் புராணக்காரரும், புரோகிதர்களும், பூசாரிகளும் பொது நலத்தின் போரால் வாழ்வை நடத்தும் வயிற்றுப் பிழைப்புக்காரர்களும் ஆதிக்கம் செலுத்துகின்றார்கள் என்றால் நம் நாட்டு வாலிபர்களுக்கு கண்ணும் காதும் இருக்கின்றதா இல்லையா என்று கேட்கின்றோம்.

---

ட்டத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறவர்களுமே தவிர வேறல்ல.

ஏதோ பழமைப காலத்து அரசர்கள் தங்கள் மடமையினுல் கட்டிவைத்த கோவில்களும் அவர்கள் விட்ட சொத்துக்களால் நடக்கும் உற்சவங்களும், இப்போது சில கொடுமைக்காரர்கள் மக்களிடத்திலிருந்து அநியாய வழிகளில் கொள்ளையடித்து சம்பாதித்த பணத்தைக் கொண்டு கீர்த்திக்கும் தங்களை உயர்த்திக் கொள்வதற்கும் சிலர் தாங்கள் செய்தகொடுமையினுல் ஏற்படும் பாவத்தைத் தொலைப்பதற்கும் என்று பழுது பார்ப்பதும் புதிப்பிப்பதும் இல்லாவிட்டால் இவ்வளவு பெருமைகள் கூட சொல்லிக்கொள்ள வகை இருக்காது என்றே சொல்லலாம்.

சமயம் என்பதும், வைணவம் என்பதும், சைவம் என்பதும் என்ன என்று பொதுவாக யோசிக்குமிடத்தில் பார்ப்பனர்களுக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு தங்களை அறியாமல் பார்ப்பனீயத்திற்கும் பார்ப்பன ஆதிக்கத்திற்கும் உழைக்கும் சாதனங்களா அல்லவா என்பதை கிதானித்து நடுநிலைமையில் இருந்து பார்த்தால் யாருக்கும் விளங்காமல் போகாது.

எனவே இப்படிப்பட்ட சைவத்தைப்பற்றியோ சமயத்தைப் பற்றியோ ஏதாவது எழுத நேரிடுவதால் "நாட்டின் க்ஷேமத்திற்கோ மக்களின் மோட்சத்திற்கோ" எவ்வித மான ஆபத்துக்கள் எப்படி நேரிட்டுவிடும் என்பதைப்பற்றி விருப்பு வெறுப்பின்றி நிதானமாய் யோசித்து பார்க்கும்படி வாசகர்களை வேண்டிக்கொள்ளுகின்றோம்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறகு திரு ஈ.வெ. ராமசாமி நாயக்கர் சைமன் கமிஷனும் பார்ப்பனரல்லாதார் இயக்கமும் என்பது பற்றி பேசி எல்லோரும் சங்கத்தில் சேர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். பிறகு திரு. டி. சீனிவாச முதலியார் ஒரு பார்ப்பனரல்லாதாரா யிருந்தும் அவர் முனிசிபல் தேர்தலில் நின்றதற்கு தான் ஏன் உதவி செய்யவில்லை என்பதற்கு காரணம் சொன்னார். அதாவது திரு முதலியார் நாணயப் பொறுப்பற்றவர் என்றும் அவரது நடவடிக்கையை ஊர் ஜனங்கள் எல்லோரும் வெறுத்து ஒரு மகாநாடு கூட்டி அவரை முனிசிபல் நிர்வாகத்தில் இருந்து விலக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள் என்றும் சர்க்காரிலும் அவரது நடவடிக்கையைக் கண்டித்து, அதாவது அவரது நாணயத்திலேயே குற்றம் சொல்லியிருக்கின்றார்கள் என்றும் மற்றும் அவர் கூடாது என்பதற்கு பலகாரணங்கள் பொது ஜனங்களுக்கே தெரியும் என்றும் சொன்னதுடன் பார்ப்பனரல்லாதார் இயக்கமோ சுயமரியாதை இயக்கமோ என்பது ஒழுக்கத்தைப்பற்றி லக்ஷியம் செய்யாமல் பிறப்பைமாத்திரம் கவனிக்கின்ற கொள்கையுடைய இயக்கம் அல்லவென்றும், அந்த மாதிரி [illegible] பார்ப்பன இயக்கம் என்றும் அவ்வித கொள்கைகளை ஒழிப்பதற்குத்தான் சுயமரியாதை இயக்கம் இருக்கின்றதே ஒழிய ஒழுக்கமும் நாணயமும் இல்லாதவர்கள் போய் அண்டிக்கொள்வதற்கு அவ்வியக்கம் இடம் கொடுக்காதென்றும்; அப்படி இடம் கொடுக்க நேர்ந்தால் அது மறைந்துபோவதே மேலென்றும், இக்கருத்துக்கொண்டேதான் அநேக பார்ப்பனரல்லாதாரை உத்தியோக முறையில் அதாவது பார்ப்பனரல்லாத மந்திரிகளைப்பற்றிக் கூடத்தாம் தாக்கி இருப்பதாகவும், பார்ப்பனரல்லாத அரசியல் தலைவர்கள் என்பவர்களையும் மத இயல் தலைவர்கள் என்பவர்களையும் தாக்கி வருவதாகவும், இனியும் அநேகம் பேருடன் போராட நேரிடும் என்றும் சொன்னார்.

பிறகு திரு. கண்ணப்பர் பார்ப்பன அதிகாரிகளின் கொடுமையையும் பார்ப்பனரல்லாதாரில் பலர் நமது இயக்கத்திற்கும் நாணயத்திற்கும் விரோதமாய் நடப்பது பற்றியும் எடுத்துச் சொல்லி பார்ப்பனரல்லாத இயக்கமும் வகுப்புவாரி பிரதிநிதித்துவமும் இதுவரை செய்துவந்த நன்மையையும் எடுத்துச் சொன்னார்.

பிறகு, திரு ராமநாதன் அவர்கள் தென் இந்திய கலஉரிமைச்சங்கத்திற்கு அங்கத்தினர்கள் சேரவேண்டுமென்பதை வலியுறுத்திப்பேசினார்

பிறகு அக்கிராசனர் திரு. வெங்கிட்டபெருமாள் நாயுடு அவர்கள் உபன்யாசகர்களை ஆதரித்துப்பேசி கூட்டம் இரவு 9-மணிக்கு இனிது முடிந்தது.

திருவாளர்கள் கண்ணப்பரும், ராமநாதனும் சென்னைக்கும், பென்ஷன் ஜட்ஜி திரு வரதராஜுலு நாயுடு சேலத்திற்கும் பிரயாணமானார்கள். ஒரு நிருபர்.

---

நாவலூற்றுச் சமரச சன்மார்க்க சங்கத்தின்

## இரண்டாம் ஆண்டுவிழா

ஒட்டன் சத்திரம் திரு. வேலுச்சாமி பிள்ளையவர்கள் சமரசநிலையத்தில், நவமாய் அமைக்கப் பெற்றுள்ள கொட்டகையின் கண், திரு. த. வெ. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் தலைமையின் கீழ் 1928 செப்டம்பர் 15, 16-ஆம் நாட்களில் ஷை விழா நிறைவெய்தியது. முதல் நாள் கடவுள் வாழ்த்துக்குப் பின்னர் தலைவர் நமது தமிழர் முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாயுள்ள சில மூடப்பழக்கவழக்கங்களையும் நன்கெடுத்துக் காட்டி சாதிப்பூசல், சமயப்பிணக்கு முதலிய தொற்றுநோய்களை யொழித்து சமத்துவம் சகோதரத்துவம் முதலிய அன்புச்சமயமாகிய சமரச சன்மார்க்கத்தை நாமெல்லோரும் ஆதரித்து வரல் வேண்டுமென்று அமிழ்தினுமினிய செந்தமிழ் நடையில் கேட்போருள்ளங் கசிந்துருகுமாறு முன்னுரை நிகழ்த்தினார்கள்.

பின்னர் கன்னியூர் வித்துவான் திரு அப்துல் சுகூர் சாய்பு அவர்கள் "தாய்நாடு" என்னுஞ் செம்பொருள் பற்றியும் திரு சிதம்பரசாமிக்கவுண்டரவர்கள் "வள்ளுவரும் இல்லறமும்" என்ற அரிய பொருள்பற்றியும் பூவாளூர், ஜீவகாருண்ய சங்கக்காரியதரிசி திரு பொன்னம்பலனார் "ஜீவகாருண்யம்" என்னும் பொருள் குறித்தும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இரவு 9-30 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

இரண்டாம்நாள் காலையில் உத்தமபாளையம "எலகிதசாமி" ஆசிரியர் தேவாரம் நாராயணசாமி செட்டியார் அவர்கள் தலைமையின் கீழ் "நகரின் பயன்" "வாலிபர் இயக்கம்" "உழவுத் தொழில்" "காந்தியடிகள்" என்னும் பொருள்கள் பற்றி முறையே திரு மகாதேவ ஐயர் அவர்கள், வித்வான் திரு அப்துல் சுகூர் சாயபு அவர்கள், திருசிதம்பரசாமிக்கவுண்டரவர்கள், திரு பொன்னம்பலனார் அவர்கள் முதலாயினோர் பேசினார்கள்.

திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் "தமிழ்த்தாய்நிலை" யென்ற பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினார்கள், ஒட்டன் சத்திரம் திரு. வேலுச்சாமி பிள்ளையவர்களால் பதினையாயிரம் ரூபாய்க்கு மேல் செலவிட்டுக் கட்டப்பெற்ற நிலையத்தின் நோக்கத்தையும் திரு பிள்ளையவர்களின் அரிய பெருந்தகைமையையும் பற்றி திரு. சுவாமி சிவநேச அடிகளும் திரு. கல்யாண சுந்தர முதலியாரவர்களும் பாராட்டிப்பேசினார்கள்.

மாலை 3 மணிக்கு திரு. த. வெ. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் தலைமையின்கீழ் "திருக்குறள் ஆராய்ச்சி" என்னும் பொருள்பற்றி பண்டிதர் திரு.வேங்கடசாமி நாட்டார் அவர்களும் 'வெற்றுரை' என்னும்பொருள்பற்றி திருச்சிகி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளையவர்களும் "இறைவனும் இயற்கையும்" என்னும் செம்பொருள்பற்றி "நவசக்தி" ஆசிரியர் திரு. வி. கலியாண சுந்தர முதலியாரவர்களும் "சுகபோகம் சிவயோகம்" என்னும் தொடர் மொழி பற்றி திரு. மா. ரா. குமாரசாமி பிள்ளையவர்களும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

அவைத் தலைவரவர்கள் முடிப்புரை கூறியபின் திரு. விஸ்வநாதம் பிள்ளையவர்களால் நன்றி கூறி தலைவர் முதலாயினோருக்கு மலர்மாலை புனைந்து வாழ்த்துப்பாக்கள் பாடிய பின்னர் இரவு பத்து மணிக்குச்சபை இனிது நிறை வெய்தியது.

ஜி. பாலதாஸ் நாயுடு,
திண்டுக்கல்.

---

பார்ப்பனீயம் ஒழிந்த சடங்கும் 'குடி அரசு' 'திராவிட'னுக்கு

## நன்கொடையும்.

—)o(—

கோவை நகர ஆட்சிக்கழக உறுப்பினரும் பால கன்ட்ரூக்டருமான திரு பி. முத்துசாமி பிள்ளை அவர்களின் இல்லக்கிழத்தியார் திருமதி வள்ளியம்மாள் மண்ணுலகைநீத்த பதினாறும் நாட்சடங்கு பார்ப்பனீயமின்றி 4-10-28 ம் நாள் வியாழக்கிழமை திருப்பேரூரில் கொடுமுடி, திருவாளர் வசந்தராய் தேசிகர் அவர்களால் நடத்தப்பெற்றது. 500 ஏழை மக்களுக்கு அறுசுவையோடு, உண்டியும் 100 பேருக்குப் புதியஉடையும் ஐந்து ஏழைப்பெண்மணிகட்குப் புதிய சேலையும் அளிக்கப்பட்டன. "திராவிடனுக்கு" நன்கொடையாக ரூபாய் ஐந்தும், "குடி அரசு"க்கு நன்கொடையாக ரூபாய் ஐந்தும், ஏஜண்டு திரு A. R சிவானந்தம் அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

(ப-ர்) திரு பிள்ளையவர்கட்கு எமது மனமார்ந்த அநுதாபத்தையும் வந்தனத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

## உடுமலைப்பேட்டை டி. மு. கோர்ட்டு.

1928-வது அ நெ 609

பிரேம்ஜி சேட்—வாதி

திருப்பூர் முன்சிப்கோர்ட் பல்லடம் தாலூகா கொமாரபாளையம் கிராமம் மஜரா செஞ்சேரியிலிருக்கும் வெங்கிடாஜலம் செட்டிமகன் சீரங்கஞ்செட்டி 1 நபீகான் சாயபு 2—பிரதிவாதிகள்.

ஷை 1-ம்பிரதிவாதிக்கு தெரிவிக்கும் நோட்டீஸ் ஷை நெம்பரில் வாதி, பிரதிவாதிகள் பேரில் பற்றுவாவு கணக்குப்படி வட்டிஉள்பட ரூ. 136—3—0 க்கும் பின்வட்டி செலவுக்கும் பிராதுசெய்து 18—10—28உல் விசாரணைக்காக வாய்தாபோட்டிருக்கிறது. ஆக்ஷேபணையிருந்தால் ஷை தேதியில் ஷை கோர்ட்டில் ஆஜராகித் தெரிவித்துகொள்ள வேண்டியது. இல்லாவிட்டால் ஒருதலைபக்ஷமாக தீர்ப்பாகிவிடும்.

3—10—28, உடுமலைப்பேட்டை.

வாதிவக்கீல்,
A. முத்தையா பிள்ளை, பி. ஏ. பி. எல்.

எமது விடுதலைக்கு

## இரங்காத தேனே!

பினங்கு, ஸ்ரீமதி ஜானகியம்மாள் எழுதுவது

உலகில் பெண்ணடிமை கொள்ளை என்நாட்டைக்காட்டிலும் முன்னின்று மார்தட்டும்நாடு தமிழ் நாடு இத்தமிழ்நாட்டுத் தமிழர்களின் சுதந்திரத்தைப் பறிக்கப் பார்ப்பனர்கள் தமிழ்நாடேகி பலபொய்யும்புனை சுருட்டுமான புராணங்களை இயற்றி அவற்றால் தமிழர்களின் அறிவைக்கெடுத்து சூழ்ச்சிகள் செய்து தமிழ் நாட்டை சீர்குலையச்செய்த நயவஞ்சகத்தின் குட்டையெல்லாம் வைக்கம் வீரர் ஸ்ரீ நாயக்கரும், ஸ்ரீ கைவல்லிய சாமியாரும், இன்னும் சில பெரியார்களும் அஞ்சா நெஞ்சத்துடன் முன்னின்று வாரி வாரி சொற்பொழிவுகளின் மூலம் இறைக்கின்றனர். இதனாலன்றோ தமிழ் மக்கள் இன்று சுதந்திரதாகம் கொண்டிருக்கின்றனர். மேற்படி பெரியார்கள் சிற்சில சமயம் பெண்களின் விடுதலைக்கும் போதிப்பதுண்டு. பண்டையகாளிலிருந்தசாப்பாட்டுராமன்களாகிய கவிபாடிகள் தம் வயிற்றுப் பிழைப்புக்காக பெண்களை அடிமைப்படுத்த பல கவிகளும் கதைகளும் பாட்டுகளும் இயற்றியதினால் அவை பெண்களை அடிமைப்படுத்த மூலகருவிகளாயின! மிஸ் மேயோ! நம் நாட்டினர்களை ஏதோ குறைகூறி விட்டதாகக் கருதி "எமது நாடு கர்ணகி பிறந்த நாடு! மாதகி பிறந்த நாடு! வள்ளி பிறந்த நாடு! சாவித்திரி பிறந்த நாடு! திரௌபதை பிறந்த நாடு! இன்னும் எத்தனையோ பதிவ்ரதா சிரோன்மணிகள் பிறந்த நன்னாடு!" என்றும் இந்நாட்டை! குறைகூறி விட்டாள் என்றும் கூக்குரல் போடமட்டிலும் அனேக வைதீக வீரர்கள் கிளம்பினார்களேயன்றி ஸ்ரீமதி மேயோ சொன்ன ஊழல்கள் இல்லையென்று சொல்லவோ சீர்திருத்தவோ யாரும் முன்வரவில்லை. ஸ்ரீமதி சரோஜனி தேவி அம்மாளுக்குக் கூட கோபம் கிளம்பி மிஸ் மேயோவை கண்டிக்க அமரிக்க நாடு செல்கின்றார்களாம். இவர்களின் "வீரத்தன்மை"யை மெச்சுகின்றதா? அல்லது நகைக்கின்றதா.?

மிஸ் மேயோ! இந்தியப் பெண்மணிகளின் பரிதாபமான நிலைமைகளை எடுத்தெழுதியவைகளைப் பார்த்தால் கல்நெஞ்சமும் கரையும். ஆனால், தமது சகோதரிகளாகிய பெண்களின் பரிதாப நிலைமையை எண்ணி கொஞ்சமேனும் இரங்காமல் அவைகளை சீர்திருத்த முயலாமல் "உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சல்" என்றபடி நமது கல் நெஞ்சர்களாகிய வைதீகர்கள் "எங்களப்பன் பாட்டன் முப்பாட்டன்களெல்லாம் யானை ஏறினார்கள்! குதிரை ஏறினார்கள்! ஒட்டகம் ஏறினார்கள்! நாங்கள் அவ்வித உயர்நிலையிலிருந்தோம்! இவ்வித உன்னத நிலையிலிருந்தோம்!" என இன்னமும் பழம் குப்பைகளுக்குள்ளேயே தம் மூளைகளை நுழையவிடுகின்றார்களே தவிர தம்மை சீர்திருத்திக்கொள்ள தம் மூளையை உபயோகிப்பதில்லை. ஆண்களின் அடிமை வலையில் பெண்களாகிய நாங்கள் கட்டுண்டுகிடப்பதால் யாங்கள் தக்க முயற்சியின்றி அவ்வடிமையிலிருந்து மீள முடியாது. "பெரிய படிப்பாளிகள்" "நல்ல அறிவாளிகள்" என்பவர்களும் "பெண்களுக்கு சுதந்திரம் கொடுப்போமாகில் உலகிற்கே பெரும் மோசம் வந்துவிடும்" எனக்கூறி நடுங்குகின்றனர். ஏ! சகோதரர்களே! நாங்கள் துஷ்ட மிருகங்களல்ல; எங்களுக்காக நீங்கள் அஞ்சவேண்டாம்; நாங்களும் உங்களைப்போல மனிதர்கள்தான். நாங்கள் உங்களுக்கு தீங்கிழைக்க மாட்டோம். உங்களுடைய சுதந்திரத்தை கொள்ளை கொள்ளோம்! உங்கள் சகோதரிகளாகிய எங்களின் பரிதாபத்தை மிஸ் மேயோ எடுத்தறிவித்தவைதான் உங்களின் நெஞ்சத்தில் பதியவில்லையா? உங்களுடன்பிறந்தாங்கள! உங்களுக்கு இன்னும் எத்தனை வருஷம் அடிமைப்பட்டிருப்பது! இனிமேலாகிலும் எம்மீது இரக்கங் கொண்டு எமது வர்க்கத்தினர்களாகிய பெண்களின் விடுதலைக்கு உழைக்க முன்வருவீர்களாகில் உங்களுக்கு விடுதலை தானாகவே கிட்டும்.

---

பட்டிவீரன்பட்டி

நாடார் மஹாஜன சங்கம்,

---

நாடார் மஹாஜனங்களுக்கோர் விஞ்ஞாபனம்.

கனவான்களே !!

நாடார் குலத்தினரின் ஆசார சீர்திருத்தத்திற்காகவும் கல்வி அபிவிர்த்திக்காகவும் உழைத்துவரும் நமது சங்கத்தின் லட்சியங்களை நிறைவேற்றும் பொருட்டு குலாபிமானிகளை மென்மேலும் அங்கத்தினர்களாகச் சேரும்படி கேட்டுக்கொள்கிறோம் சங்கத்தில் அங்கத்தினர்கள் எவ்வளவுதூரம் அதிகமாகவிருக்கிறார்களோ அவ்வளவுதூரம் சங்கத்திற்கு ஆற்றலும் கவர்ன்மெண்டின் மதிப்பும் எற்படுகிறதென்று நம்மில் எல்லோரும் நன்கறிந்ததே.

சென்ற 5—8—28-ல் நடைபெற்ற கௌன்சில் மீட்டிங்கும் 'சங்கத்திற்கு அதிகமான அங்கத்தினர்கள் சேர்ப்பதைக் குறித்து லாட்டரி சீட்டு விற்கப் போகும்போதும் இன்னும் மற்ற சமயங்களிலும் சங்கத்திற்கு ஜீவிய அங்கத்தினர்களும், ஸ்பெஷல் அங்கத்தினர்களும் சேர்த்துக் கொடுப்பதற்கு நாடார் மக்கள் அனைவரும் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்" என்று கேட்டுக் கொண்டிருக்கிறது.

வருஷத்திற்கு ஒரு ரூபாய் கொடுத்து ஆர்டினரி அங்கத்தினர்களாக சேரமுடியாதவர்கள் நம்மில் யாரிருக்கின்றனர். 12 ரூபாய் கொடுத்தால் நிர்வாக சபை (கௌன்சில்) அங்கத்தினராகலாம்- ஸ்திரீகளுக்கும் அங்கத்தினராகும் பாத்தியதை யுண்டென்பதையும் ஞாபக மூட்டுகிறோம்.

ஆபீஸ் :— காரியதரிசிகள்.

பட்டிவீரன்பட்டி } W. P. A சௌந்தரபாண்டிய நாடார்
29—9—28 } K S N பெரிய தம்பி. நாடார்.

---

## மழையோ மழை.

—0—

கதிரவன் கொடுமை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. ஆற்று ஜலம் வற்றிப் போய்விட்டது; அகவிலை அதிகரித்துவிட்டது விவசாயிகள் வானத்தை நோக்கிய வண்ணமாயிருக்கிறார்கள்

இந்நிலையில் பிராமணர்கள் மழையை வரவழைக்கச் சில சூழ்ச்சிகளைச் செய்து வருகிறார்கள். அதாவது இவ்வூர் பெருமாள் கோவிலிலுள்ள "முதற்கடவுளாகிய பிள்ளையாரை" மேற்படி கோவிலுக்கு அருகாமையிலுள்ள அப்பங்குளத்து தண்ணீருக்குள்குப்புறப்போட்டு அமுக்கி வைத்திருப்பதாகத் தெரிகிறது. இது நடந்து பத்து தினத்துக்கு மேலாகியும் கதிரவன் கொடுமை தணிந்தபாடில்லை [ஐயோ பிள்ளையாரேஉன் கதி இப்படியா ஆகவேணும்!] இவ்வூர் கிராமதேவதைகளாகிய அய்யனாருக்கும் மாரியம்மனுக்கும் சென்ற வெள்ளிக்கிழமையிலிருந்து திருவிழா நடத்திவருகிறார்கள் இனிக் கொடும்பாவி கட்டி அடித்து அழவேண்டியதுதான் பாக்கி ஆனால் என் யோசனைப்படி செய்தார்களேயானால் மழை பெய்யும் என்பது நிச்சயம். அதாவது பாமரர்களை ஏமாற்றும் பார்ப்பனர்களில் ஒருவரை கையும் காலும் கட்டி மேற்படி குளத்தின் தண்ணீருக்குள் 8 மணி நேரம் அமுக்கி வைத்தால் நிச்சயமாய் மழை பெய்யும் என்று ஓர் நிருபர் எழுதுகிறார்.

---

## நோட்டீஸ்.

கனவான்களே!

எங்கள் நாணயக்கடையில் தங்கம், பவுன், டாலர், வெள்ளி முதலிய எல்லாவித நாணயங்களும் இந்தியா, ஜாவா முதலிய ரூபாய் நோட்டுகளும், பவுன் வெள்ளி நகைகளும் விற்கல், வாங்கல் செய்யப்படுவதுடன் கைதேர்ந்த இந்திய தொழிலாளர்களை வைத்து எல்லாவிதமான நகைகளும் தவணைப்படி செய்து கொடுப்பதால் நகை செய்யச் சொல்லி ஆர்டர் செய்பவர்கள் நகை மாதிரி, அளவு, நீளம் முதலியதைத் தெரிவித்துக் கொண்டால் கூலி சேதாரம் பேசிக்கொண்டு அதன் பிரகாரம் தவணைப்படி செய்து கொடுக்கப்படும். கூலி சேதாரம், நகை கொடுக்கும் தேதி முதலியவற்றையும், முன்பணம் பெற்றுக்கொண்ட தொகையையும்கண்டுகையெழுத்துடன் கம்பெனி ரசிதுகொடுப்பதால் நகை வாங்க வரும்பொழுது ரசிதைக் கொண்டு வந்து தந்து ரசிதில் கண்டபடி கூலி, சேதாரம், நகையிலுள்ளபாக்கித் தொகை முதலானதும் செலுத்திவிட்டு நகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

எங்கள் கம்பெனியில் நகை வேலைக்காரர்களுக்கு தேவையான பலவித ஆயுதங்களும் அச்சு வகையராக்களும் விற்பனை செய்து வருகிறபடியால் வேண்டியவர்களுக்கு சகாயமான விலைக்கு விற்பனை செய்வதுடன் கம்பெனியில் இல்லாத சாமான்கள் ஆர்டருக்கு இந்தியாவிலிருந்துவருத்திக் கொடுக்கப்படும்.

மு. அ. சோம சுந்தரம்,
237 செ. மெயின் ரோட் தைப்பிங்.

## அருப்புக்கோட்டையில் சுயமரியாதைப் பிரசாரம்.

இந்நகர் பந்தலகுடி மெயின் ரஸ்தாவிலுள்ள ஆதிதிராவிடர் இராப்பாடசாலை கட்டிடத்தில் திருவாளர்கள் சாது கந்தசாமி அவர்களின் அவைத் தலைமையின்கீழ் ஓர் பொதுக்கூட்டம் கூடியது.

திருவாளர் கணபதி அவர்கள் "விடா முயற்சி" என்னும் பொருளைப்பற்றியும், திருவாளர் S. நாராயணன் அவர்கள் "ஒற்றுமை" என்பதைப்பற்றியும் திரு. வீ. சு. பு. வீரய்யா "தீண்டாமை" என்னும் பொருள்பற்றியும் திரு கருப்பையாபிள்ளை "சுயமரியாதையியக்கமும் நமது கடமையும்" என்பதுபற்றியும் பேசிமுடித்தார்கள். பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப் பெற்றன.

1. அருப்புக்கோட்டை யூனியன் போர்டில் காலிநாமினேஷன் ஸ்தானத்துக்கு புளியம்பட்டி வாசியும், ஆதிதிராவிட வகுப்பினருமான திரு. சு. குருசாமிக்குடும்பர் அவர்களை நியமுகம்செய்யும்படி இராமநாதபுரம் தாலூகா போர்ட் பிரஸிடெண்ட் அவர்களை இக்கூட்டம் மன்றாடிக் கேட்டுகொள்ளுகிறது.

2. தற்சமயம் காலியாயிருக்கும் இராமநாதபுரம் ஜில்லா போர்டு ஸ்தானத்திற்கு சென்னைசட்டசபை மெம்பரும், பொதுஜனத் தொண்டுசெய்து வருபவருமான உயர் திருவாளர் W. பு. அ. சௌந்திரபாண்டிய நாடார் அவர்களை நியமுகம்செய்யும்படி மாகாண கவர்னர்துரையவர்களையும், முதல் மந்திரியவர்களையும் இக்கூட்டம் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறது.

சோமய்யா.

---

## பெருஞ்சாளிப் புதுப்பட்டி, சுயமரியாதைப் பள்ளிக்கூடத் திறப்புவிழா

இவ்வூர் சுயமரியாதைச் சங்கத்தின் ஆதரவில் 28—9—28 ல் ஒரு ஸ்பெஷல் கூட்டம் கூடியது. திரு. பு. செ. அ. ராமசாமியவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். திரு சு. ந. போடியவர்களால் "கல்வியின் அவசியம்" என்பது பற்றி ஓர் அரிய உபந்யாசம் செய்யப்பட்டது.

கனம். தி. திம்மாரெட்டியாரவர்களால் ஏழை மக்களின் முன்னேற்றத்திற்காக இச்சங்கத்தின் ஆதரவில் ஓர் ஆரம்பக்கல்வி இராப்பாடசாலை "சுயமரியாதை எலிமெண்டரி இராத்திரிப்பாடசாலை" என்ற பெயருடன் திரு. கா. சு. நா. நா. நாராயண ரெட்டியாரவர்களின் மானேஜ்மெண்டில் ஏற்படுத்தப் பட்டது.

பின்னர் அக்ராசனாவர்களால் முடிவுரை கூறப்பட்டு காரியதரிசியவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இரவு சுமார் 10—30 மணிக்கு இனிது கலைந்தது

காரியதரிசி

---

## பார்ப்பனீயம் ஒழிந்த சடங்குகள்.

(1) முத்துப்பேட்டை கீழவீதி திரு. வீர, சொ. தெட்சிணாமூர்த்தி செட்டியாரவர்கள் தம்தகப்பனுருக்கு இரண்டுவருஷ காலமாக பார்ப்பனரைக்கொண்டு நடத்திவந்த வருஷதிதியை சுயமரியாதையை முன்னிட்டு இவ்வருஷம் புரட்டாசிமீ 11தேதியன்று புரோகிதமின்றி நண்பர்களுக்கும், ஏழைகளுக்கும் அன்னமளித்து முடித்தார்.

த. மா. தருமலிங்கத்தேவன்

ஃ ஃ ஃ

(2) புதுவைமுத்தியால்பேட்டை திரு ரு. பழனியப்பசெட்டியார் தம்தாயாருக்கு வருஷாந்திர திதி கொடுப்பதை நிறுத்தி நாளது ஷு புரட்டாசிமீ 18உ புதவாரம் பார்ப்பனப்புரோகிதத்தை அறவேயொழித்து ஏழைகளுக்கும் பந்துக்களுக்கும் அன்னமிட்டார்,

கண்ணப்பன்

ஃ ஃ ஃ

(3) திருச்சினுப்பள்ளி தாலூகா கம்பரசம் பேட்டை குருப்கூடலூர் கிராமத்திலிருக்கும் வா. மு. பெரியண்ணபிள்ளை, காலம் சென்ற தமது தமையனாரின் ஞாபகார்த்தமாக நாளது விபவ ஷு புரட்டாசி மீ 8 தேதி ஞாயிற்றுக்கிழமை பார்ப்பனப் புரோகிதத்தை அறவேபொழித்து பந்துமித்திரர்களுடன் அறுசுவை உண்டியருந்தி களிப்பெய்தினர்.

ஒரு நிருபர்.

ஃ ஃ ஃ

(4) மாயவரம் புதுத்தெருவிலிருக்கும் P.W.D.காண்ட்ராக்டர் ஸ்ரீமான் R கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் தம் தந்தையின் திதியை இவ்வருடம் சுயமரியாதை உணர்ச்சி மேலிட்டு எவ்விதப் புரோகிதமும் இன்றி இறந்தவர்கள் ஞாபகார்த்தமாக பந்துமித்திரர்களுக்கும் ஏழைகளுக்கும் அன்னமிட்டு முடித்தார்.

ஃ ஃ ஃ

(5) மலாய்நாட்டில் தம்பினைச்சேர்ந்த "ரீபோங்" ரப்பர்தோட்டத்திலிருக்கும் திரு கருப்பையா அவர்கள் தமது மனைவியிறந்த பதினாறுவது தினத்தக் கருமாதி செய்வதற்காகத் தம்பினிலுள்ள பார்ப்பனர் ஒருவரை வீட்டுக்கு வரும்படி கேட்டார். அவர் 30 வெள்ளி (45 ரூபாய்) கொடுக்கும்படி கேட்டார்.20 வெள்ளிக்குப் புரோகிதஞ் செய்ய மறுத்துவிட்டார். திரு. கருப்பையா 25 வெள்ளிக்கு முடிவுபண்ணுஞ் சமயத்தில் நமது நண்பர் திரு ச. மூத்துக்குமாரு அவர்கள் ஷெ கருப்பையாவுக்கு பார்ப்பனரில்லாமல் திதிகள் நடத்துவதைப்பற்றிக் "குடி அரசு" பத்திரிகையிலிருந்து ஒரு வியாசத்தை வாசித்துக்காட்டியபின் ஷெ கருமாதி ஏழைகளுக்கு அன்னதானத்துடன் மிகவும் சிறப்பாகச் செய்யப்பட்டது.

ஒரு நிருபர்.

---

## சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்.

---


இன்ப மர்மங்களை விளக்கும் புதிய

## கொக்கோகவசனம்.

### இதுவே பழைய நூல். 6 ம் பதிப்பு


இதுவரை எதிலும் வெளிவராத இன்ப விஷயங்கள் எல்லாம் விளக்கமாக அதிவீர ராமர் பாடிய பழைய கொக்கோகத்தின்படி தேசபந்து பத்திராதிபர் செ. கி. பாலலரால் எழுதப்பட்டுள்ளன. இதில் காணாத விஷயங்களே இல்லை. கல்யாணமானவர்களுக்கும் ஆகாதவர்களுக்கும் இது முக்கியமாக வேண்டிய நூல். பெயரளவில் வெளிவந்த பல போலி நூல்கள் போல் அல்லாது காதல், சாதி, சாதிப் பொருத்தம், அமுதநிலை, இன்பமுறை, இன்பகிரமம், பள்ளியறை நுட்பங்கள் போன்ற நூற்றுக்கணக்கான விஷயங்களைப் படங்களுடன் விளக்கும் உண்மையான நூல். 280 பக்கமுள்ள புஸ்தகம் 1-க்கு விலை ரூ. 1—0—0.

தனம் அண்டு கம்பெனி,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை.


---


எங்கள் விசேஷகுறைந்த விலை விற்பனை

## டேபில் டைம்பீஸ் இனும்!!



எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்குமேஜையின் பேரில்வைக்கக்கூடிய ஒரு அழகான டேபிள் டயம்பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூந்தங்கள். விலை ரூ. 5-15-0. தபால் கூலி பிரத்தியேகம்.

ஜீனன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ்போஸ்டு, மதராஸ்.


---


## கணித சோதிடம்.

பாகித கணிதப்படி கணிதஞ் செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதிஅனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதிஅனுப்புவதைக்கொண்டு பெண்ணுக்குப்புருஷனும் புருஷனுக்குப்பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம அருமையான பூர்வீகசோதிட நூற்களும்பலவுள்ளதால் நாங்கள் எழுதிஅனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார்பேட்டை, புதுச்சேரி.


---

## கடவுளை வணங்க பார்ப்பனத்தரகர் வேண்டுமோ?

## 'தேசிய சிக்கனம்'

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

"தேசிய முன்னேற்றத்திற்கு முக்கிய முதற் சாதனமாயிருப்பது தேசிய சிக்கனமே. பிரசித்திபெற்ற பாரத மக்களிலொருவரால் கொண்டுவரப்பட்ட கதர் கிளர்ச்சியானது தேசியசிக்கனத்தையே அடிப்படையாய்க் கொண்டது. தலைவராகிய மகாத்மா காந்தி கதர் இயக்கம் உண்டாக்கினதைக்காட்டிலும் வேறெவ்விதமான பெரியநன்மையையும் இந்நாட்டிற்குச் செய்திருக்கமுடியாது. நம்மில் ஒவ்வொருவரும் இத்துறையில் முனைந்தால் ஜனங்களின் தொழிலின்மையைப் போன்ற சிலவிஷயங்களைச் சுலபமாகத் தீர்த்துக் கொள்ளலாம்.

நீங்கள் இக்கதர் இயக்கத்தை நாலாபக்கங்களிலும், ஒவ்வொரு வீட்டிலும் பரப்பும்படி அறிவுறுத்துகிறேன். கதர் கட்டுவது ராஜத்துரோகமெனக் கூறும்பொருத்தமற்ற வாதத்தை ஒதுக்கிவிட்டு நமது கவனமின்மையாலும், ஆதரவின்மையாலும் நசித்துப்போய் க்ஷீணதசையையடைந்து வரும் நமது தேசியக்கைத்தொழில்களை உயிர்ப்பிப்பதே நமது கடமை. நாம் கவனம் செலுத்தக்கூடிய அடுத்த முக்கியமான காரியமென்னவெனில் குடிசைத் தொழில்களை உற்சாகப் படுத்துவதேயாம். இந்தியாவானது கிராமங்கள் நிறைந்த ஒரு தேசம். தேசத்தின் செழிப்பானது முக்கியமாக கிராமாந்திரங்களின் செல்வாக்கைச் சார்ந்திருக்கிறது. உழவுத்தொழிலைத் தவிர குடிசைத் தொழில்களின் முன்னேற்றமானது உங்களுடைய கிராமத்தின் செல்வத்திற்கு இருதயம் போன்றது. இந்தியாவில் லட்சக் கணக்கான ஜனங்கள் பசி நோயினாலும் அறிவின்மையினாலும் பீடிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்காக உதவி ஒன்றும் செய்யாமல் இருக்கிற ஒவ்வொருவனையும் துரோகி என்று சொல்லலாம்.

"ஒருவனை நீங்கள் தாழ்ந்தவனென்று சொன்னால் உங்களை இன்னொருவன் தாழ்ந்தவன் என்று சொல்லுவான்."

ஆகையால் ஏழைகளுக்கிரங்கி ஒவ்வொருவரும் சுத்தக் கதர் அணியுங்கள். பசிப்பிணி மக்களை விட்டு ஓடும். ஒற்றுமையாகவும், சமத்துவமாகவும் நடந்து நன்மையடைவோமாகப் பாரத மாதாவை பிரார்த்திக்கிறோம். போலிக் கதரை வாங்கி ஏமாறாதீர்கள். தயவுசெய்து சுத்தக் கதர் அணியுங்கள்.

மகாத்மா காந்தி கதர் சங்கம்,
நூல்கடைவீதி, அருப்புக்கோட்டை.

## ஓர் திருத்தம்.

சில மாதங்களுக்கு முன் "குடி அரசி"ல் வெளியான திருச்செங்கோடு சுயமரியாதைச் சங்கத் திறப்பு விழாவைக் குறித்துள்ள வியாசத்தில் ஆனந்த நிலயம் ஸ்ரீதாசுவாமியார், என்று தவறுதலா யெழுதப்பட்டிருக்கிறது. "ஆனந்த நிலயம்" என்பதுஎனது விலாசமல்ல. ஆகையால் வாசகர்கள் ஸ்ரீதாசுவாமியார் என்று திருத்தி வாசித்துக்கொள்ளக்கோருகிறேன்.

ஸ்ரீதாசுவாமி.


அநேக தங்க மெடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்ற டாக்டர் எஸ். பி மருந்துகள்.

[ரூ. 1-8-0] அமிர்தரஸம். (Rs. 1-8-0)

இந்த ரசம் ஏனைய ரசங்களுக்கு ஆதாரமாயும், சமயத்திலுதவும் சஞ்சீவியாயும், எல்லாராலும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் ஒரே மருந்தாயுள்ளதும் அமிர்தரசம் தான். ஆபீஸ் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெறலாம். தலைவலி முதல் கை, கால் குடைச்சல் வரையில் எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீரணம் வயிற்றுப்போக்கு முதலிய உள் வியாதிகளும் இந்த அமிர்தரசம் ஒன்றினாலேயே ஒழிந்துவிடும். புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0

அமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும் தேவாமிர்தம்.
பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குன்ம வியாதிகள், மலச்சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதிகளையும் போக்கி உடனுடன் கிரமமாய் பலப்பிரவர்த்தி செய்து தேகத்தை தங்கமயமாக வைத்திருக்கும் சிவ ஔஷதம். விபரம் கேட்லாக் பார்க்கவும்.
24 நாள் உபயோக 1 சேர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.

தங்கரேக் குளிகை.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.
இந்த உயர்ந்த அபூர்வமான தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து செய்தது. உடைந்த தாதை கட்டி நீடித்த போக சக்தியும் நரம்புக்கு முறுக்கையும் கொடுக்கக்கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0. 50 மாத்திரை ரூ. 8—8—0. வி. பி. வேறு.

தண்டபாணி வைத்தியசாலை, 292, சைனாபஜார், மதராஸ்,



ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், தங்க பதக்கங்களும் பரிசுபெற்று வருவது.

குருநாத சஞ்சீவி எண்ணை.

7-நாள் சாப்பிடக்கூடியது விலை ரூபாய் 3-0-0 தபால் சார்ஜ் வேறு.
இந்த எண்ணை மூன்றுமாய் மூலவ்யாதி உள்ளவர்கள் சாப்பிட்டால் பூர்ணசுகமடையலாம்.
தீரும் வியாதிகள்.— மூலக்குறு, வெட்டைச்சூடு, வெள்ளை, பவுத்திரம், மேக காங்கை, நீரேக எரிச்சல், மலசிக்கல், வாய்ப்புண், நீர் எரிச்சல், முதலிய சகலவியாதிகளையும் உடனே கண்டிப்பதோடு, தேகத்துக்கு குளிர்ச்சியை கொடுக்கும். பத்தியம் இல்லை.
உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

ஆராத புண்களை 3 வேளையில் குணத்தைக் காட்டக்கூடிய,

சித்த சர்வ ரணாங்க களிம்பு.

டப்பி விலை ரூபாய் 1-0-0 வி. பி. வேறு.
இந்தக் களிம்பை புண் இருக்கும் இடத்தில் காலை, மாலை இருவேளையும் தடவிக்கொண்டு வந்தால் 5-நாளையில் எவ்விதமான புண்களும் ஆறிவிடும் என்பது கைகண்டபலன்.

விலாசம் :— ராஜவைத்திய ஆஸ்ரமம்,
சேவ்வாய்பேட்டை, சேலம்.



வெள்ளி நகைகள்.

சுத்தமான வெள்ளி! நேர்த்தியான வேலை!!
நம்மிடம் அரைஞாண், முடிச்சுருத்திக்கொடி, முகப்பு போட்ட கொடி, சாதா செயின் கொலுசு, முத்துச்செயின் கொலுசு, டைமண்ட்பட்டை செதுக்கிய செயின் கொலுசு, புதுச்சேரி கொலுசு, மாங்காய் பட்டை கொலுசு, கடகம், கால் தண்டை, மயிர் மாட்டி, அறைப்பு சங்கிலி, சாவி கொத்து, போல் காப்பு, சலங்கை இன்னும் பலவித வெள்ளி நகைகளும், கடுக்கன், கம்மல், தோடு, மூக்குத்தி, மோதிரம் முதலிய கல் நகைகளும தயாரித்து வியாபாரிகளுக்கு மொத்தமாயும் விலை சரசமாயும் அனுப்பப்படுகின்றன. ஒரு முறை ஆர்டர் செய்து பாருங்கள். மற்ற விபரங்களுக்கு லெட்டர் எழுதுக.

B. N. கெங்காராமய்யர்,
நகை வியாபாரம், சேவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. India)

## திருநெல்வேலி ஜில்லா ஆதி திராவிடர் கூட்டம்.

1928-ளு செப்டம்பர் மீ 25-உ பகல் 10-மணிக்கு பாளையங் கோட்டையில் கனம் எம். தேவதாஸ் வக்கீல் அவர்கள் இல்லத்தில் திருநெல்வேலி ஜில்லா மகாநாடு கூடும் விஷயமாய் ஒரு ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. மகாநாடு அக்டோபர் மீ 15-உ க்குள் நடைபெற்றுவொழிய சைமன் கமிஷனர்களை பேட்டிகாணமுடியாதெனவும் ஷை மகாநாடுநடக்க செலவுக்காக கிராமத்திற்கு இரண்டு ரூபாய் வீதமாக வசூல் செய்ய வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

---


## பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. திலுசுகள் விலையேறுவதும் இறங்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்.

திரௌபதை அம்மன் கோவில் வீதி. புதுச்சேரி.

---

தீபாவளி! தீபாவளி!

## நவீன கலர்புடவை.

உயர்ந்த மல்லில் பச்சை, புளு, வயலெட் கருப்பு, செகப்பு, ஸ்கப் கலர்கள், கெட்டிச் சாயம், கரையிலும், முந்தியிலும் பூவேலை மான முள்ள நூதன புடவை.

18 மு X 46 அங் புடவை ரூ. 4...14—0

ஷை கலர்களில் சாதா புடவை 4— 4—0

கைநிசவில் தயாரித்த உடல் செகப்பு, கருப்பு, பலமாதிரி புள்ளிகள் போட்ட ஜரிகை உத்திராட்சம் பேட்டுவைத்து 1 இஞ்சு ஜரிகை முந்தி போட்டது.

18 மு X 46 அங் புடவை 1க்கு ரூ. 7-0-0

ஷை ஜரிகை பெங்களூர் முந்தி போட்ட புடவை 1க்கு } 7-12-0

6th Edition கேட்லாக் இனாம்.

The Madura Oriental Trading Co.

Laxmi Cloth Store, Madura- (S. I.)

---

## ‘விஸ்வநேசன்’

விஸ்வகுல முன்னேற்றத்திற்கு உழைத்துவரும் ஒரு வாரப்பத்திரிகை

தற்கால நிலைமைக்கேற்ற வண்ணம் பொதுவான சீர்திருத்தக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டது.

ஆசிரியர் திரு. கா. அப்பன்ணாச்சாரி

இந்நாட்டு சந்தா ரூ 3—0—0

வெளிநாட்டுக்கு ரூ 4—0—0

விலாசம்:— மானேஜர்,

விஸ்வநேசன் காரியாலயம், ஈரோடு.


---

தாழ்த்தப்பட்டவர்களை சகோதரராகவும் சமத்துவமாகவும் நடத்தும் வரை சுயராஜ்யம் கிடைப்பது அரிது.

வீரய்யா.

---


மிகப் பெரிய தருமம். மிக்க தனம் பெறச்சமயம்.

நாடார் மகாஜன சங்கம்

## ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் 2வது லாட்டரி.

1929-ளு ஆகஸ்டு-மீ 20-உ பிரைஸ் எடுக்கப்படும்.

சீட்டொன்றிற்கு ரூபாய் ஒன்று வீதம் இரண்டு லக்ஷம் சீட்டுகள்.

22 சீட்டுகளடங்கிய புஸ்தகம் கிரயம் ரூபாய் 20.

81010 ரூபாய் 15000 பிரைஸ்களாகக்கொடுக்கிறோம்.

1-வது பிரைஸ் ரூ. 10000.

2-வது பிரைஸ் ரூ. 4000. 4-வது பிரைஸ் ரூ. 1000.

3-வது பிரைஸ் ரூ. 2000. 5-வது பிரைஸ் ரூ, 1000.

6-முதல் 15-வரை பிரைஸ்கள் ரூ. 500 வீதம்

(மற்ற பிரைஸ்களின் விபரம் புஸ்தகத்தில் பார்க்க)

பதினையாயிரத்திற்கதிகமான பிரைஸ்கள் கொடுப்பதால் 14 சீட்டுகளில் ஒன்றுக்கு கட்டாயம் பிரைஸ் கிடைப்பது திண்ணம்.

மற்ற விவரங்களை நாடார் மஹாஜன சங்கம் காரியதரிசிகளுக்கு எழுதித் தெரிந்து கொள்ளுவதுடன் புஸ்தகத்திற்கு எழுதினால் மறுதபாலில் அனுப்பி வைக்கப்படும்.

ஆபீஸ்:— பட்டிவீரன்பட்டி, மதுரை ஜில்லா. 30—9—28.

ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார்,

கூ. ச. நா. பெரியதம்பி நாடார்,

காரியதரிசிகள்.

---




## ஜீவாம்ருதம்.

வைத்யரத்ன பண்டிட் கோபாலாச்சார்லு அவர்களால் சிறந்த மூலிகைகளினின்றும் கண்டு பிடிக்கப்பட்டு கால் நூற்றாண்டுகளாக உலகில் நிலவி வருவது. ஆரோக்கியம், தேஜஸ், வீரியம், பலம் முதலியவைகளைத் தன்னுள்ளடக்கிய ஜீவாம்ருத புட்டி என்பது மிகையா! மெலிந்த தேகிகளுக்கும், நோயாளிகளுக்கும் இது உண்மையில் ஒரு வரப்பிரசாதந்தான்.

இன்றே ஒரு புட்டிக்கு ஆர்டர் செய்து பாருங்கள்.

விலை ரூ, 3—4—0.

ஆயுர்வேதாஸ்ரமம்.

151 கோவிந்தப்ப நாயக்கன் தெரு,

தபாற் பெட்டி 287, சென்னை.

---

## ஆரோக்கிய லேகியம்.

மலபந்தமே சகல வியாதிகளுக்கு மூலகாரணம் அன்றாடம் மலப்பிரவர்த்தி சரியாய் ஆகிவிட்டால் சகல வியாதிகள் வாராது. இந்த லேகியத்தில் கழற்சிக்காய் அளவு இரவில் படுக்கைக்கு போகுமுன் சாப்பிட்டால் காலையில் சுகமாய் மலப்பிரவர்த்தி ஆகும்.

ஒரு சேர் டப்பி ஒன்றுக்கு விலை ரூபாய் 2—0—0

அரைச்சேர் டப்பி ஒன்றுக்கு விலை „ 1—0—0

பண்டிட், சி. வா. ஞான சம்பந்தம்,

ஜீவாக்ஷாமிர்த இராஜ வைத்தியசாலை, சீகாழி. S. I. R.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கோலம் செய்கிறாள்'' என்று கம்பர் கூறுகிறார். கூனியை நோக்கி "நீபோ" என்று கூறியதாக வால்மீகி இராமாயணத்திலெங்கும் காணப்படவில்லை. மேலும் கூனி போன பின்னரே சடையவிழ்த்துத் தலைவிரித்துப் பொட்டழித்து நகை சிதறுகிறாள் கைகேசி யெனக் கம்பர் கூறுகிறார். வால்மீகியோ கைகேசியை அவசரப்படுத்திக் கூனி கோப அறைக்கு அழைத்துச் சென்று நகை சிதறி சடையவிழ்த்து முடித்து அலங்கோலமாகக்கிடக்கச் செய்கிறாள் என்று கூறுகிறார். கூனி கைகேசியை விட்டுப் பிரிந்தாளென்று அவர் கூறவே இல்லை. கோப அறை யொன்றிருந்தது அங்கே போய்க் கைகேசி அலங்கோலமாகக் கிடந்தாள் என்பவற்றையெல்லாம் கூறாது கம்பர் தான் இருந்த இடத்திலேயே அலங்கோலமானாளென்று கூறுகிறார். நகைகளை யெல்லாம் கழற்றி யெறிந்து விட்டுக் கடைசியாகச் சடையை யவிழ்த்து நன்றாகச் சேர்த்து முடிந்துகொண்டு கிடந்தாள் என்று வால்மீகி கூற கம்பர் முதலில் சடையவிழ்த்து விரித்து நகை சிதறினாளெனக் கூறுகிறார். இனி மேற்செல்லுதும்.

---

'ரிவோல்ட்' 'ரிவோல்ட்'

**'REVOLT'**

—)o(—

"குடி அரசி"ன் கொள்கையைக் கொண்டு கூடிய சீக்கிரம் வாரம் ஒருமுறை வெளிவரும் ஓர் ஆங்கிலப் பத்திரிகை.

வருட சந்தா ரூ. 3 தான்.

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.

ஆசிரியர்.- "குடி அரசு" & "ரிவோல்ட்,"

ஈரோடு

---

## அறிவிப்பு.

"குடி அரசு" வாரப் பத்திரிகையின் மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

வருட சந்தா உள் நாட்டுக்கு ரூபாய் மூன்று தான்.

வெளி நாடுகளுக்கு ரூபாய் நான்கு.

மானேஜர்.

---

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

**இனாம்! இனாம்!!**



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன் பேனா இனாம்.

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ 3-15-0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

ஜீனன் வாட்சு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

---



# இழந்தபலத்தை திரும்பக் கொடுக்கும்
## மன்மத கோலாகல குளிகை.

அநேக பரிசுகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது. தாதுபுஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். இழந்த ஆண்மையும், பலமும் திரும்பவரும். நல்ல ஜீரணம், ரத்த விர்த்தி, இந்திரியகட்டு, போக சக்தி, தாது புஷ்டி இவற்றை தரவல்லது. எவ்வித பலஹீனம். நீர் கஷ்டம், துரிதஸ்கலிதம், இடுப்பு வலி, உஷ்ண ரோகங்கள் நீங்கும். ஒருமுறை பரீக்ஷித்தவர்களுக்கே இதனருங்குணம் விளங்கும். 120-குளிகை ரூ. 10—0—0. 60-குளிகை ரூ. 5-0-0 30-குளிகை ரூ. 3—0—0 20-குளிகை ரூ. 2—0—0.

### குருநாக பஸ்பம்— மூலத்திற்கு,

ஆப்ரேஷன் அவசியமில்லை; முளை தானே கரையும்; சீழ் மூலம், ரத்த மூலம், குத்தல், மூலமுளை, மல பந்தம் முதலிய மூலம் ஒன்பதுவும் அதிசீக்கிரம் குணமாகும். உத்திரவாத முன்னை சிறந்த ஔஷதம். 1-மண்டலம் 48-நாள் பஸ்பம் ரூ. 30—0—0. 24-நாள் பஸ்பம் ரூ. 15—0—0. மாதிரிக்கு 6-நாள் புட்டி 1-க்கு ரூ. 4—0—0.

### பிரமேக நிவாரணி

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்ச்சுருக்கு, எரிச்சல், குத்தல், உடனே நிற்கும். நிச்சயமாய் 3-வேளையில் குணமாகும். தவறாது. புட்டி 1-க்கு விலை ரூ. 2—0—0.

### கெற்ப எண்ணெ

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம், மாதாந்தர வயிற்றுவலியை உடனே நிறுத்தும் சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை, இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும். மிக்க அனுபவமானது. புட்டி 1-க்கு ரூ. 2—0—0.


பினங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

### சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

**C மலையப்பசாமி,** நித்தியானந்த வைத்தியசாலை,
பழனி S. I.

---

எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்கைக்கெடியாரங்கள்.



இதிற்கண்டபடி எந்த ஷேப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தக்க ஆபரணம் போலிருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்ரவாதம். ரூ 4-15-0 வி. பி. வேறு

ஜீனன் வாட்சு கம்பெனி
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

---

## திருப்பூர் ஜெனரல் நிட்டிங் பாக்டரி.

இந்தியாவிலே குறைந்த விலையுள்ள பனியன்கள் எங்களிடம்தான் கிடைக்கும். விலை 32 இஞ்சு கார்டிகன் டஜன் 1-க்கு ரூபா 3—8—0 தான்.

இன்னும் பலவிதமான பனியன் தினுசுகளும் கிடைக்கும்.

விலைவிபர ஜாபிதாவுக்கு எழுதுங்கள்.

எல்லா இடங்களுக்கும் ஏஜெண்டுகள் தேவை.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)

3-ம் பக்கத் தொடர்ச்சி.

னுக்கு சூத்திரனும் புத்தியில் வித்தியாசப்பட்டாலும் மல நாற்றத்தில் கூட சுர அளவு மாத்திரை வித்தியாசமுண்டோ! பெண்ணின் மலமும் சூத்திரன் மண்ணும் நாஸ்திகன் என்னும் சொல்லிற்கு பயந்து தரும சாஸ்திரங்களுக்குக் கட்டுப்பட்டாலும் நாற்றம் எப்படிக் கட்டுப்படும். பாப்பான் கழிக்கும் மலத்தில் பாதி தான் பெண்களும் சூத்திரர்களும் கழிக்க வேண்டும், அதற்கு மேற்பட்டால் ஆசனத்துவாரத்தின் பாதியை தைத்து விட வேண்டுமென்கிற விதியில்லாததினால் நம்முலகம் அந்த அளவிற்குத் தப்பித்துக் கொண்டது. இதைவிட பெரிய தெண்டனை விதித்த தரும சாஸ்திரம் இதை என் எழுதவில்லையோ தெரியவில்லை. எனவேபாப்பானின் தரும சாஸ்திரப்பிரகாரம் நாற்றம் போகிறவரையிலும் கழுவிப்பிழைக்கக் கூட நமக்குவழியில்லையே

இந்த தரும சாஸ்திரத்தை ஆதாரமாகக் கொண்டு அதிலேயே பழகினவர்களான ஸ்ரீமான்கள் எம் கே ஆச்சாரியும் வி டி அய்யரும் முழு ஆணுக்கும்முழுப்பெண்ணுக்கும் கலியாணமாவதற்குஎப்படி ஒப்புவார்கள்? ஸ்மிருதியின் சௌசவிதியின் வழியே பார்த்தால் முழு ஆணுக்கு அரைப்பெண்தானே வரவேணடும்! படித்துப் பாஸ்பண்ணி உத்தியோகத்திற்கு வருவதற்கு ஆணுக்கு 24 வயதாகிறது. மேல்படி சௌச விதிப்படி பார்த்தால் இந்த ஆணுக்கு 12 வயது பெண்ணைத்தானே ஒத்துக் கொள்ள முடியும். 14, 16 வயது பெண்ணை எப்படி ஒத்துக் கொள்ளுவது? 40, 50, வயதுடைய ஆணுக்கு 20, 30 வயதுடைய பெண்களல்லவா ஆணுக்குப் பெண்பாதி என்னும் தரும சாஸ்திரத்தின் விதிக்கு ஒத்ததென்று யாராவது இடையில் கேட்டு விடாதீர்கள். சாஸ்திர நிச்சயம் தெரியாதவர்களாகி விடுவீர்கள். 24 வயதுடைய பெண்ணின்பலத்தை 12 வயதுடைய பெண்ணுமானத்திற்கோ தான் பின்னல் வாழ வேண்டிய தற்கோ தாய் தகப்பனின் தாக்ஷண்யத்திற்கோ தாங்கினாலும் அவதிப்பட்டு ஆஸ்பத்திரிக்குப் போகாமல் ஆயுள் எல்லாம் வைத்தியம் பண்ணி தன் குழந்தையையும் வாரிக் கொடுத்து தான் க்ஷயத்தால் மடிந்தாலும் இதை பாரமார்த்திக விஷயம், இந்து விவாகம் புனிதமானது; இக லோக சுகத்தை மட்டும் உத்தேசித்துச் செய்வதல்ல. வைதீக சடங்கிற்கே செய்வது என்று சாஸ்திரசம்மதத்தோடு தர்க்கம்பண்ணுகிறார்கள். ஆனால் சாஸ்திர மென்னும் எட்டைக்காட்டிப் பிழைக்கும் ஆச்சாரியப்பாப்பானுக்கு நாலாயிரத்துக்கு மேல்பட்ட அலவன்சு கொடுத்து ராஜாங்கம்சட்டம் செய்யும்சபைக்கு அனுப்பினால்அவன் சட்டம்தானே அவனுக்கு வரும். பெண்கள் ருதுவானபின் விவாகம் செய்தால் கற்பு நிலைபெறுமென்று அவர் சொன்னதாக அவரைச்சில பத்திரிகைகள்கண்டித்திருக்கின்றன. திரு எம் கே ஆச்சாரி அப்படிச் சொல்லுவதற்கும் வைதீகப் பாப்பார்கள் அதையே வற்புறுத்தி பேசுவதற்கும்காரணம் அவர்கள் சாஸ்திரம். அதை விபரத்துடன் பின்வரும் வியாசத்தில் எழுதுகிறேன்.

சீமைக்குப்போன பாப்பானும் சிம்லாப்பாப்பானும் பட்டணத்துப்பாப்பானும் துவார் மகாநாட்டுக் கல்கத்தாப்பாப்பானும் சௌச விதியை எப்படி நடத்துகிறார்களோ? அவன்வைத்த சாஸ்திரம் அவன் வைத்தபடியெல்லா மிருக்கும். அவனுக்கு அதில் எதற்கு விஸ்வாசம்? மற்றவர்களுக்குத்தான் விஸ்வாசம் வேண்டும் பாடுபடாமல் இன்னொருத்தன் மடிக்காசு பாப்பான் கைக்கு எப்படி வரும்.

**சுயமரியாதை பெற்றால்**
**சுயராஜ்யம் பெறலாம்**

**64 — பக்கம் — 64**

# ஆனந்த விகடன்

இதுகாறும் 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்த ஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளிவரும் என்பதை சந்தா நேயர்களுக்கு வெகு சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகள் அதிகமாக வெளியிடப்படுகின்றன. தினமும் நூற்றுக்கணக்கானவர் சந்தாதாரராகச் சேருகின்றனர். மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் "ஆநந்த விகடன்" சிறந்ததென்ற அபிப்பிராயம் ஜனங்கள் மனதில் நன்கு பதிந்திருக்கிறது. "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு
தபால் கூலியுள்பட 1...0...0
வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ 1...4...0

**மாதிரி காபி இனாம்.**

**ஆனந்த விகடன் ஆபீஸ்,**
**244. தங்கசாலை வீதி, மதராஸ்.**

தந்தி விலாசம்:—"விகடன்", டெலிபோன் நே. 3311.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

# மன்மத ஸ்தம்பன குளிகை.


**குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கோடுக்கப்படும்.**

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம், ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

## PHOTO HAND CAMERA



ரொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0


நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளிவான போட்டோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி நூறு நூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போட்டோவின் அளவு $3\frac{1}{2} x 2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சிறிது காலைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 குக் கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

**கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்.**

நான்காம் பதிப்பு! நான்காம் பதிப்பு

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டு. சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம். நேர்த்தியான அச்சு
நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.




இந்த ஏரோப்ளேன் டிரேட் மார்க்பார்த்து வாங்குங்கள். இந்த டிரேட் மார்க் இருந்தால்தான் உண்மைப் புஸ்தகம்.

## இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1 துறவிகளின் கதி என்ன
2 இல்வாழ்க்கை ஏன் சிறந்தது.
3 இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி.
4 இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும் பாடு.
5 பெண்ணின் பெருமை. பெண் கல்வி.
6 நாணம் எப்படி உண்டாயிற்று?
7 உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8 நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9 நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன
10 இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்.
11 ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன. உண்மையான கலியாணம் எது.
12 காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13 இல்லறத்தில் எப்படி வெற்றியடைவது?
14 மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15 கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16 தமக்குச் சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டு கொள்வது?
17 ஸ்திரீகளுக்கு எப்பொழுது காமம் உண்டாகிறது?
18 அவர்களிடத்தில் அமிர்த நிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
19 பல ஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20 சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
21 ருது வாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22 பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்குக் காரணம். இதைப் போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23 மனம்போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24 கருவிலிருப்பது ஆணா பெண்ணா என்று எப்படி அறிந்து கொள்வது?
25 கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்துகொள்ளவேண்டிய முறைகள்.
26 கர்ப்ப காலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக் கூடிய வியாதிகள்.
27 அவைகளைப் போக்கடிக்கும் உபாயங்கள்.
28 முதல் மாதத்திலிருந்து கடைசி மாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29 ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப் போக்கடிக்கும் விவரம்.
30 புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது. இதைப் போக்கிக் கொள்வதெப்படி.

31 அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத் தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்கமுடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசுக் கொலை அநியாயம்.

32 ஒருவன் எத்தனை மாதரை மணம்புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக்காப்பாற்றிக் கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்கவேண்டுமானால் அவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும்.

33 தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா. தாசிகள் வீடுபோகும்நண்பர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சிலவார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

விலை ரூபாய் 2-0 0.
ஒரே சமயத்தில் இரண்டு காபிகளுக்கு எழுதினால் உள்நாட்டுக்கு தபால் செலவு இனாம்.

**வாஸன் புஸ்தகசாலை,**
**241, தங்கசாலைத் தெரு, தபாற் பெட்டி நெ. 119 ஜி.டி. மதராஸ்.**

# ஹிப்னடிசம், மெஸ்மெரிஸம்.

முதலிய அரிய அற்புதங்களைக் கற்கவேண்டுமோனால்,
சுயமரியாதை பெற வேண்டுமோனால்,



# ஜீவ வசிய பரம ரஹஸ்யம்

என்னும் மனோ வசிய ஜீவ வசிய நூலைப் படித்து
பயனடையுங்கள்.

## இதிலடங்கிய விஷயங்கள் :—

I முதற் பாகம் :—(11 பாடங்கள்)

முன்னுரை.

1 மானிட வசியம்
2 தன்னம்பிக்கைப் பற்றி
3 தன்னாட்சி
4 இருவகை மனம்
5 சுய மந்திரம்
6 மஹா ரகஸியம்
7 பிராணாயாமம் (படங்களுடன்.)
8 வியாகூலமும், வீண்திகிலும்
9 அயர்ந்த நித்திரை
10 மன வோர்மை
11 முக்கிய குறிப்பு

II இரண்டாம் பாகம் :—(7-பாடங்கள்.)

1 டெலிபதி or மானஸ தந்தி
2 மானஸ தந்தியின் முதல் அப்பியாசம்
3 மானஸ தந்தியின் இரண்டாவது அப்பியாசம்
4 மானஸ தந்தியின் மூன்றாவது அப்பியாசம்
5 மானஸ தந்தியின் நான்காவது அப்பியாசம்
6 மானஸ தந்தியின் ஐந்தாவது அப்பியாசம்
7 பொதுக் குறிப்பு

III மூன்றாம் பாகம் :—(12-பாடங்கள்.)

1 கோரிய பெண்ணை மணமுடிப்பது
2 மணமகன், மணமகளுடைய காதல் விருத்தி
3 ஸ்திரீகளிடத்தில் கௌரவம் பெறுதல்
4 ஸ்திரீ புருஷனுடைய ஊடலை ஒழித்தல்
5 நண்பரின் இழந்த நேசத்தைப் பெறுதல்
6 பதமற்ற குழந்தையைப் பக்குவப் படுத்தல்
7 கல்யாணத்திற்கு ஏற்பாடான மணப்பெண்ணின் காதலைப் பெற
8 மனமில்லா மணத்தை மகிழ்வு பெறச் செய்தல்
9 உருக்கமற்ற உறவினரின் உருக்கத்தைப் பெறுதல்
10 மேலதிகாரியின் விருப்பத்தைப் பெறுதல்
11 உலகத்தில் முதன்மைபெற
12 நட்பை உறுதிப்படுத்தல்

### அனுபந்தம்—1

மானிட வசிய ரஹஸ்யம்.

மானிட வசிய ரஹஸ்யத்தின் பீடிகை

மானிட வசியம், தன்னடக்கம் வியாதிகளை விலக்கிக் கொள்ளல் அப்பியாசம், மந்திரம்

### அனுபந்தம்—2

அற்புதானந்த ரஹஸ்யம்

அல்லது

சில அபூர்வ மர்மங்கள்

பிராணாயாமத்தால் வசீகர வசியம் பெறுவ தெப்படி?

இரகசிய முறையால் எளிதில் அரிய பொருள் சம்பாதிப்ப தெப்படி?

ஒரு சாதாரண யோக சாதனையால் எல்லா விருப்பங்களையும் பெற்றுக்கொள்வ தெப்படி?

எப்படிப்பட்டவர் கூட்டத்திலும் இணையில்லாக் கண்ணியம் பெறுவ தெப்படி?

நட்சத்திர உதவியால் எல்லாக் காரியங்களிலும் வெற்றி பெற்று எல்லாவித இடையூறுகளையும் தாண்டிக்கொண்டு அப்பாற் சென்று அளவிறந்த வெற்றி பெறுவதெப்படி?

முதிர்ந்த வயதிலும் வாலிபதசையை வளர்ப்ப தெப்படி?

கண் பார்வையையும், கறு ரோமத்தையும், வெண் தந்தங்களையும் காப்பாற்றிக் கொள்வ தெப்படி?

பிராணாயாமம் முதலியவற்றால் பூரணச் சுகத்தை நிலைப்படுத்திக் கொள்வ தெப்படி?

இருவித ஆன்மப் பயற்சியால் எல்லா நோய்களையும் கண்டிப்ப தெப்படி?

பிளேக், விஷ ஜுரம் ஆகியவற்றைத் தடுத்துக் கொள்வ தெப்படி?

வைசூரியும், வாந்தி பேதியும் வாராமல் தடுப்ப தெப்படி?

மரணம் வருமுன் அதை அறிந்து கொள்வ தெப்படி?

மரண காலத்தில் செய்யப்படும் ஒருவகைக் கிரியையால் மரணத்துக்குப் பின் மகா மேலான உன்னத ஸ்தானத்தைத் பெறுவ தெப்படி?

சாதாரணப் பிராணாயாமத்தால் உங்களுடைய பகைவரை நண்பராகச் செய்து கொள்வ தெப்படி?

மனோ சக்தியை அளவுக்கு மிஞ்சி அபி விருத்தி செய்து கொள்வ தெப்படி?

ஜியூஜிட்ஸு முறைப்படி மரித்தோரை எழுப்புவ தெப்படி?

நாகப் பாம்பின் விஷத்தைப் போக்குவ தெப்படி?

வில்வ வேரின் விநோதங்களென்ன?

புளி யேப்பத்தைத் தடுப்ப தெப்படி?

துளசியின் மகிமை என்ன?

நாயுருவியின் அதிசயம் யாது?

லவணத்தின் மகிமை என்ன?

இத்துடன் பல விநோத விடுகதைப் படங்களும் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

மேல் நாட்டில் 12 பவுன் (ரூ. 80) விலை மதிப்பிடக் கூடிய இப் புத்தகத்தை நம் ஏழை நாடாகிய இத்தமிழ் நாட்டின் கண் விலை ரூ. 3-க்கே விற்க துணிகின்றோம்.

புத்தகத்தை வாங்கிப் படிப்பவர்கள் ஒவ்வொரு பக்கத்தையும் ஒரு மூன்று ரூபாய் மதிப்பிடுவார்கள். என்பது நிச்சயம்.

உடனே உங்களுக்கோர் ஐசுவரியம் போன்ற இப்புத்தகத்தை வரவழையுங்கள்.

இதன் விலை ரூ. 3—0—0, தான் வி.பி. வேறு.

எல்லா புத்தக ஷாப்பிலும் கிடைக்கும்.

ஒரே முறையில் 2 பிரதி வாங்குவோர்க்கு தபால் சார்ஜ் இனாம்

**மனோஹரம் கம்பெனி, தப்பால்பெட்டி 248, சென்னை.**

ஸ்ரீமதி நாகம்மாள் அவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.